Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 110 | செவ்வாய்க்கிழமை | பங்குனி 3 ஆம் நாள் 16 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## கிளிநொச்சியில் வீடு தீக்கிரை!

கிளிநொச்சி, மார்ச் 16
கிளிநொச்சி, ஆனந்தநகரில் வீடொன்றுக்கு நேற்று இரவு தீ வைக்கப்பட்டுள்ளது. வீட்டில் இருந்த பொருள்கள் தீக்கிரையாகியுள்ளன 19

# இலங்கை மீதான பிடியை இறுக்குகின்றது பிரிட்டன்

கொழும்பு, மார்ச் 16
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடரில் பிரிட்டன் தலைமையில் இணை அனுசரணை நாடுகளால் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையானது, திருத்தப்பட்டு முன்னரைவிட வலுப்படுத்தப்பட்டுள்ளது. 19

## பிரிட்டனின் செயற்பாடு நம்பிக்கைத் துரோகம்!

வெதும்புகிறது கோத்தா அரசு



கொழும்பு, மார்ச் 16
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான புதிய பிரேரணைக்கு பிரிட்டன் தலைமை 19

## விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16
மோட்டார் சைக்கிள் சறுக்கியதில் விபத்தில் சிக்கியவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம், மணியந்தோட்டத்தைச் சேர்ந்த 19

## விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16
விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். 19

## திடீரென மயங்கி வீழ்ந்த ஓட்டோ சாரதி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16
யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் 19

## தீக்குளிப்பதற்கு முயன்ற சுகாதாரத் தொண்டர்கள்

நீர்வு கிடைக்கும்வரையில் போராடுவோம் எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16
யாழ்ப்பாணத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட சுகாதாரத் தொண்டர்கள் இருவர் தீக்குளிக்க முயன்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சக சுகாதாரத் தொண்டர்கள் அவர்களை ஒருவாறு தடுத்தனர். தங்களுக்கான நியமனங்களை வழங்கக்கோரி கடந்த 16 நாள்களாக சுகா 19

## இலங்கை அரசுக்கு அநீதி இழைக்காதாம் இந்தியா!

ஜெனிவாவில் தமிழர்களை கைவிட உத்தேசம்?

கொழும்பு, மார்ச் 16
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு தாம் அநீதி இழைக்கப் போவதில்லை என்று இந்தியா தெரிவித்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான அதிகாரப்பற்றற்ற கலந்துரை 19

## யாழ். பெண் உட்பட ஐவர் கொவிட் தொற்றால் சாவு

கொழும்பு, மார்ச் 16
கொரோனா வைரஸ் தொற்றால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உள்ளிட்ட மேலும் ஐவர் உயிரிழந்துள்ளனர் 14

## யாழ். நகரில் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதி

வடக்கில் நேற்று 7 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், மார்ச் 16
வடக்கு மாகாணத்தில் நேற்று 7 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத் 14

## நாளைய பேரணிக்கு பல தரப்புகள் ஆதரவு

தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஒன்றாகத் திரளுமாறு அறைகூவல்

யாழ்ப்பாணம், மார்ச் 16
தமிழ் மக்களுக்கு நீதிகோரி நல்லூரில் நாளை நடைபெறவுள்ள பேரணிக்குப் பல்வேறு அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துள்ளன. இந்தப் பேரணியில் அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் கலந்துகொண்டு பேராதரவு தரவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 19



## கத்திக்குத்தில் இறந்தவரின் குடும்பத்தின் மீது தாக்குதல்

- சந்தேகநபரின் வீடு தீக்கிரை
- கிளிநொச்சியில் நேற்று சம்பவம்

கிளிநொச்சி, மார்ச் 16
கிளிநொச்சி, வட்டக்கச்சியில் கடந்த 10ஆம் திகதி கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்தவரின் குடும்பத்தினர் மீது பொலிஸார் 14

## அம்பிகையின் உணவு தவிர்ப்பு போராட்டம் நேற்றுடன் நிறைவு

லண்டன், மார்ச் 16
இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி கோரி பிரிட்டனில் அம்பிகை 14

## கழுத்து வெட்டப்பட்டு இளம்பெண் படுகாயம்

கொடிகாமம், மார்ச் 16
கூரிய ஆயுதம் ஒன்றால் கழுத்தில் வெட்டப்பட்ட நிலையில் இளம் பெண் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ 19

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka) கம்பனிப் பதிவிலக்கம் PQ 9

# சுதந்திரத்துக்கு முன்பிருந்தே நாட்டில் ஷரீஆ உள்ளது தெரியாதா?

## சவூதிக்கு போகவே தேவையில்லையென அமைச்சர் வீரசேகரவுக்கு அஸாத் சாலி பதிலடி

**கொழும்பு, மார்ச் 16**

**ஷரீஆ சட்டத்தை பின்பற்றவேண்டுமாக இருந்தால் சவூதி அரேபியாவுக்கு போகவேண்டிய தேவையில்லை. நாடு சுதந்திரமடைவதற்கு முன்பிலிருந்தே அனைத்து இன மக்களுக்கு மான தனியார் சட்டங்கள் நாட்டில் நடைமுறையில் இருக்கின்றன என்று தெரிவித்தார், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி.**

"இலங்கை மக்கள் நாட்டு சட்டத்தையே பின்பற்ற வேண்டும். அஸாத் சாலி ஷரீஆ சட்டத்தை பின்பற்றுவதாக இருந்தால் சவூதி அரேபியாவுக்குச் செல்ல வேண்டும்" என்று அமைச்சர் சரத் வீரசேகர அண்மையில் தெரிவித்திருந்தார். அந்தக் கருத்துக்கு பதிலளிக்கையிலேயே அஸாத் ஸாலி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: எமது நாட்டில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் அவர்களுக்குரிய தனியார் சட்டங்கள் ஒல்லாந்தர் காலம் தொடக்கம் இருந்து வருகின்றன.

சிங்கள மக்களுக்கு கண்டிய சட்டம், இந்துக்களுக்கு தேசவழமை சட்டம் மற்றும் முஸ்லிம்களுக்கு முஸ்லிம் தனியார் சட்டம் என நாடு சுதந்திரம் பெற்று 73 வருடங்களாக எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இந்த சட்டங்களை பின்பற்றி வருகின்றோம். அதனால் ஷரீஆ சட்டத்தை பின்பற்றுவதற்கு சவூதி அரேபியாவுக்கு செல்லவேண்டிய தில்லை.

அத்துடன் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்ற பின்னர்தான் முஸ்லிம் தனியார் சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்தன. தாக்குதலுக்கும் முஸ்லிம் தனியார் சட்டத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்ற பின்னர் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் சிலருக்கு எதிராக, அரசு பொய்ப் பரப்புரைகளை மேற்கொண்டு வந்தது. ஆனால் விசாரணை அறிக்கையில் அரசு எதிர்பார்த்த யாருடைய பெயரும் இல்லை.

அதேபோன்று தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளையும் தேடிக் கொள்ள முடியாமல் போயிருக்கின்றது. தற்போது சிங்கள மக்களை ஏமாற்றவே புர்காவை தடைசெய்ய அமைச்சர் சரத் வீரசேகர நடவடிக்கை எடுத்திருக்கின்றார் - என்றார். (த-இ)

---

# கடத்தலை ஆதரிக்கிறாரா கோத்தா? கொழும்பு அரசியல்வாதிகள் 'ருவிட்'



கொழும்பு, மார்ச் 16

ஊடகவியலாளர் ஒருவர் கடத்தப்பட்டு, தாக்கப்பட்ட சம்பவத்தை மேற்கோள்காட்டி, "கடத்தல் சம்பவங்கள் மீண்டும் தொடர்வதை தற்போதைய அரசு ஆதரிக்கின்றதா?" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து ஹர்ஷ டி சில்வா அவரது ருவிற்றர் பக்கத்தில்,

ஊடகவியலாளர் ஒருவர் கடத்தப்பட்டு, கறுப்பு நிற வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு, அவரது செய்தி மூலங்கள் மற்றும் அரசியல் தொடர்புகள் பற்றிய தகவல்களைக் கூறுமாறு சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார். அதனைத் தொடர்ந்து அவர் வீதியோரத்தில் தூக்கி எறியப்பட்டிருக்கிறார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அவர்களே, மீண்டும் கடத்தல் சம்பவங்கள் தொடர்வதை நீங்கள் அனுமதிக்கப்போகின்றீர்களா? - என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இந்த விடயம் தொடர்பில் ருவிற்றரில் பதிவொன்றைச் செய்திருக்கும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய:

2015 ஆம் ஆண்டுக்கு முன்னரான யுகத்தை மீண்டும் நினைவுபடுத்தும் வகையில், கடந்த 10 ஆம் திகதி ஊடகவியலாளர் ஒருவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டிருக்கிறார். தமது சகா ஒருவர் பாதிப்புக்கு உள்ளாகும் வேளையில் ஏனைய ஊடகங்கள் அவருக்கான ஆதரவை வெளிப்படுத்தாமை பெரிதும் கவலையளிக்கின்றது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யார் என்பது தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதுடன், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (ப)

---

# கடன் செலுத்தாதோரின் சொத்துகளை பறிப்பதற்கு பதிலாக சலுகைக் காலம்

## வங்கிப் பிரதானிகளுக்கு பிரதமர் ஆலோசனை

கொழும்பு, மார்ச் 16

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் கொவிட் -19 தொற்று நோய் காரணமாக வங்கிக் கடன்களை செலுத்தாத தொழில்முனைவோரின் சொத்துக்களை கையகப்படுத்துவதற்கு பதிலாக சலுகைக் காலம் வழங்குவது குறித்து கவனம் செலுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச வங்கியின் பிரதானிகளுக்கு தெரிவித்தார்.

வங்கிக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத தொழில்முனைவோரின் சொத்துக்களை கையகப்படுத்துவதை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது தொடர்பாக நிதி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, தொழில் முனைவோரின் நிதிப் பிரச்சினைகளுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் நிதி அமைச்சு, மத்திய வங்கி மற்றும் தொடர்புடைய வங்கிகளுடன் இணைந்து இறுதி முடிவை எட்டவேண்டும்.- என்று பிரதர் மேலும் தெரிவித்தார். (த-இ)

---

# தொற்றிலிருந்து தப்பியவர் சுகவீனத்தால் உயிரிழப்பு!

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி, சிகிச்சை பெற்றுக் குணமடைந்து வீடு திரும்பியவர், சுகவீனம் காரணமாக நேற்று உயிரிழந்துள்ளார் என்று மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னாரைச் சேர்ந்த 86 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். இவர் மன்னாரில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அலுவலகத்தில் கடமையாற்றியவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து, அவர் தனிமைப்படுத்தல் மையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். அவர் குணமடைந்ததை அடுத்து வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

அதன்பின்னர் அவருக்கு சுகவீனம் ஏற்பட்டதை அடுத்து, மன்னார் மாவட்டப் பொது வைத்திய சாலையில் கடந்த சில தினங்களாகச் சிகிச்சை பெற்று வந்தார். இந்தநிலையில் அவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். (எ-56)

---

# போதைப்பொருளுடன் தொடர்புடையவர் பயங்கரவாத குழுவுக்கு நிதியளித்துள்ளார்!

## குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அதிர்ச்சி சந்தேகநபரை இழுத்துச் சென்றது ரி.ஐ.டி.

கொழும்பு, மார்ச் 16

போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தடுப்பில் வைக்கப்பட்டிருக்கும் ஒருவர், இஸ்லாமிய பயங்கரவாதக் குழுவுக்கு நிதியளித்துள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதனால் பொலிஸார் அதிர்ச்சியடைந்துள்ளனர். அவர் மேலதிக விசாரணைகளுக்காக பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பாணந்துறை பகுதியைச் சேர்ந்த அந்த நபர், போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சில மாதங்களுக்கு முன்னரே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுப்பில் வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றார். அவர் பேலியகொட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவரிடம் நடத்திய முதற்கட்ட விசாரணைகளின்போது, ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்குக்கு அதிகளவான பணம் வைப்பிலிடப்பட்டுள்ள விடயம் தெரியவந்தது.

அதன் பின்னர் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போதே, அவர் இலங்கையில் இஸ்லாமிய பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் ஒரு குழுவுக்கு நிதியளித்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. அதனால், மேலதிக விசாரணைக்காக அவர் பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ப)

---

# மோ.சைக்கிள் திருடினரென பெண் உட்பட இருவர் கைது

வவுனியா, மார்ச் 16

வவுனியா நீதிமன்றுக்கு அருகில் கடந்த வாரம், நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடினர் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உட்பட, இருவரை வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைதுசெய்தனர்.

திருட்டுத் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி விசாரணை மேற்கொண்ட பொலிஸார், வவுனியா கிச்சிராபுரத்தைச் சேர்ந்த பெண் ஒருவரையும் உக்கிளாங்குளத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரையும் கைதுசெய்தனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையில், திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் இராசேந்திரங்குளம் பகுதியில் மீட்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட இருவரும் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-110)

---

# இளைஞன் மீது தாக்குதல்: மூவருக்கு விளக்கமறியல்

பருத்தித்துறை, சுப்பர்மடத்தில் இளைஞர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி பருத்தித்துறை, சுப்பர்மடத்தில் கடற்கரைக் கொட்டகையில் உறங்கிக் கொண்டிருந்த ஜெகதீசன் நீகன் (வயது 22) என்ற இளைஞர் இனந்தெரியாத மூவரால் கடுமையாகத் தாக்கப்பட்டார். இரும்புக் கம்பிகள் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், தாக்குதல் நடத்தியவர்கள் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் மூவர் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர். விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவர்களை நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிமன்றம் சந்தேகநபர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (எ26)

# புர்காவை தடைசெய்தால் பிரச்சினை தீவிரமாகும்

## முஜிபுர் ரகுமான் எச்சரிக்கை



**கொழும்பு, மார்ச் 16**

**புர்காவை தடைசெய்வதால் தற்போது காணப்படும் பிரச்சினைகள் மேலும் தீவிரமடையுமே தவிர, அவை ஒருபோதும் குறையப் போவதில்லை. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் புர்கா தடை விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"மக்களின் ஜனநாயக உரிமையைத் தடைசெய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. அதன் விளைவாகப் பிரச்சினைகள் தீரப் போவதில்லை. மாறாக பிரச்சினைகள் தீவிரமடையும்.

அரசாங்கத்தின் தீர்மானங்கள் நாட்டிலுள்ள பிரச்சினை களைக் குறைப்பதற்கு வழிசெய்யும் என்று எமக்குத் தோன்றவில்லை. அதேவேளை புர்கா என்பது மதரீதியான தீவிரவாதப் போக்கின் அடையாளமாக இருக்கிறது என அமைச்சர் சரத் வீரசேகர கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் அவர் விரும்பும் ஆடையையே நாட்டு மக்கள் அணியவேண்டும் என்ற அடிப்படையில் ஒவ்வொருவரும் தமது மத ரீதியான நம்பிக்கையின்படி அணியும் ஆடைகளைத் தடைசெய்வதே தீவிரவாதப் போக்குடைய சிந்தனையாகும்' என்றார். (ஐ-இ)

# பரீட்சைகளை பிற்போட இதுவரை தீர்மானமில்லை

## பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

புலமைப் பரிசில் பரீட்சைகள் மற்றும் உயர் தரப் பரீட்சைகளைப் பிற்போடும் தீர்மானம் இதுவரை உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்படவில்லை. எனினும், பாடப்பரப்புக்கள் நிறைவு செய்யப்பட்டிருக்காவிட்டால் பரீட்சைகள் தாமதமாகலாம் என்று பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூக வலைத்தளங்கள் அல்லது இணையத் தளங்களில் வெளியாகியுள்ளதைப் போன்று ஓகஸ்ட் மாதம் நடத்துவதுக்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள பரீட்சைகளை ஒத்திவைப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்பட வில்லை. இது தவறான செய்தியாகும்.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக கடந்த வருடம் வழமையைப் போன்று தொடர்ச்சியான கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. எனவே தான் இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் உயர்தர பரீட்சை என்பவற்றுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பாடப் பரப்புக்கள் எந்தளவுக்கு நிறைவு செய்யப்பட்டுள்ளன என்பது மீளாய்வு செய்யப்படுகிறது.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றனவே தவிர பரீட்சைகளை ஒத்தி வைப்பதற்கான எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை - என்றார். (ம-இ)

# சு.க.பிரிந்தால் பெரமுனவுக்கு பாதிப்பில்லை

## இராஜாங்க அமைச்சர் செஹான் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

மாகாண சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட்டால், பெரமுன எந்தப் பாதிப்பையும் சந்திக்காது. சுதந்திரக் கட்சியினர் தனித்துச் செல்லமுன் உள்ளூராட்சி மன்ற பெறுபேற்றை மீட்டிப்பார்க்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தலை வெகு விரைவில் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மக்களின் ஜனநாயக உரிமையை முடக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. பொதுஜன பெரமுனவே அதிக மாகாண சபைகளைக் கைப்பற்றும்.

கூட்டணியில் இருந்துகொண்டு சுதந்திரக் கட்சியினர் குறிப்பிடும் கருத்துக்கள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் உள்ளன. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளியான பிறகே இவர்கள் இவ்வாறு செயற்படுகிறார்கள்.

சுதந்திரக் கட்சி- பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் பொதுஜன பெரமுன பிரதான கட்சியாகவுள்ளது. இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் நாம் கூட்டணியாகவே போட்டியிடத் தீர்மானித்துள்ளோம்.

எனினும், மாகாண சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட்டால் பொதுஜன பெரமுனவுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது - என்றார். (ம-இ)

# இலங்கை விவகாரங்கள் தொடர்பில் பிரிட்டன் நாடாளுமன்றில் விவாதம்!

## நாளைமறுதினம் இடம்பெறும்

கொழும்பு, மார்ச் 16

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளுக்கான பிரிட்டனின் கடப்பாடு ஆகியவை குறித்து பிரிட்டன் நாடாளுமன்றில் நாளை மறுதினம் விவாதம் நடத்தப்படவுள்ளது.

இலங்கை விவகாரம் குறித்த தீர்மானம் மீதான வாக்கெடுப்பு இந்த மாதம் ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இடம்பெறவுள்ள நிலையிலேயே பிரிட்டன் நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் விவாதிக்கப்படவுள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்றின் அனைத்துக் கட்சிகளினதும் தமிழ்ப் பிரதிநிதிகள் குழு ஏற்பாடு செய்துள்ள இந்த விவாதம் மார்ச் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)

# ரவூப் ஹக்கீம், ரிஷாத் அரசியல் வியாபாரிகள்

## ஐக்கிய மக்கள் சக்தி சாட்டையடி

ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவை கொள்கை யற்ற கட்சிகள் எனவும், அந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள் அரசியல் வியாபாரிகள் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக விமர்சித்துள்ளது. இந்தக் கட்சிகளுடன் அடுத்த தேர்தல்களில் கூட்டணி வைக்கக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளரான எஸ்.எம்.மரிக்கார் நேற்றுத் தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் மற்றும் மலையகத்திலுள்ள சிறு குழுவொன்று ஆகியவை கொள்கை அரசியலை நடத்துவதில்லை. மாறாக மக்கள் பிரச்சினையையும், மதத்தையும் விற்றே அரசியல் நடத்துகின்றன. இத்தகைய கட்சிகளுடன் கூட்டணி வைப்பதற்கு நான் எதிர்ப்பை வெளியிட்டேன். தனித்தே போட்டியிட வேண்டும் எனவும் வலியுறுத்தினேன்.

மக்கள் பிரச்சினைகளைப் பேசி, தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் ஆளும் கட்சிப் பக்கம் தாவி விடுகின்றனர். இத்தகைய அரசியல் கலாசாரத்துக்கு முடிவுகட்ட வேண்டும். அரசியல் முதலாளிகளை, வியாபாரி களை ஓரங்கட்டிவிட்டே அடுத்த தேர்தலை ஐக்கிய மக்கள் சக்தி சந்திக்கும். 19க்கும் ஆதரவு தெரிவித்தனர். 20க்கும் கை உயர்த்தினர். இப்படியானவர்களுடன் எப்படி கூட்டணி வைப்பது. ஹக்கீம் மற்றும் ரிஷாத் ஆகியோர் 20 விடயத்தில் நாடகமாடினர். அவர்களின் உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியது இவர்களுக்குத் தெரியும்' என்றார். (ம-44)

# சட்டங்களை ஏற்காவிட்டால் நாடு கடத்துவதற்கு ஏற்பாடு!

## விஜயதாஸ மிரட்டல்தொனி

கொழும்பு, மார்ச் 16



இலங்கையின் சட்டத்தை ஏற்கமுடியாதவர்களை நாடு கடத்துவதற்கு வழி வகுக்கும் வகையில் புதிய சட்டங்களை இயற்ற வேண்டும் என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் நீதி அமைச்சருமான விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'முஸ்லிம் மக்களின் வாக்குகள் இல்லாமல்போய்விடும் என்ற அச்சத்தால், 17 அடிப்படைவாத, இனவாத முஸ்லிம் உறுப்பினர்களின் உத்தரவுக்கு பணிந்து என்னை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க அன்று நடவடிக்கை எடுத்தார்.

ரிஷாத் பதியுதீன், அஸாத் சாலி, ஹிஸ்புல்லா மற்றும் முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்டோரே அடிப்படைவாதிகளை வழிநடத்தி, தீவிரவாதிகளை பாதுகாப்பதற்கு முயன்றனர் என்ற விடயத்தை நான் தற்போதும் கூறுகின்றேன். இது தொடர்பில் ஏன் பொலிஸாரால் விசாரணை நடத்த முடியாது?

நாம் ஷரிஆ சட்டத்துக்குதான் (அரேபிய சட்டம்) கட்டுப் படுவோம் என கூறுகின்றனர். உள்நாட்டு சட்டத்தை மதிக்காதவர்களை நாட்டில் வைத்திருக்க முடியாது. சர்வதேச சட்டத்திலும் இவ்விடயம் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

எனவே, இந்நாட்டின் சட்டத்தை ஏற்கமுடியாது என எவராவது கூறுவார்களாயின் அவர்களை நாடு கடத்த வேண்டும். அதற்கான சட்டங்களை இயற்ற வேண்டும்' என்றார். (ம-44)

# உச்சி மாநாட்டில் மியான்மர்: இலங்கைக்கு அவப்பெயரே


## கயந்த கருணாதிலக எம்.பி தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 16**

**பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் மியான்மருக்கு அரசு அழைப்பு விடுத்துள்ளதால் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. அத்தோடு மியான்மர் மக்கள் இலங்கை மீது நீண்ட காலமாகக் கொண்டிருந்த நம்பிக்கையையும் இழந்துள்ளனர். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மியான்மரில் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னர் இடம்பெறுகின்ற ஜனநாயக விரோத செயற்பாடுகளை உலக நாடுகள் அனைத்தும் நிராகரித்துள்ளதோடு, அவற்றுக்கு கடும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளன. அந்த நாட்டில் வீதிக்கு இறங்கிப் போராடிய நிராயுதபாணியான பொதுமக்களில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் இலங்கை அரசு மியான்மரை பிம்ஸ்டெக் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்து இராணுவ ஆட்சியை ஏற்றுக்கொண்டுள்ளதால், சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. மியான்மர் மக்களுக்கு இலங்கை மீது காணப்பட்ட நீண்டகால நம்பிக்கை அற்றுப்போயுள்ளது. இதன் மூலம் அரசின் இராஜதந்திர கொள்கைகளிலுள்ள குறைபாடுகளும் தெளிவாகியுள்ளன - என்றார். (ப)



# போதைப்பொருள், மது பாவனையை தடுங்கள்

## வட்டக்கச்சி மாணவர்கள் விழிப்புணர்வு

கிளிநொச்சி, மார்ச் 16

போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கை கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரி மாணவர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மாணவர்கள் தெரிவிக்கையில், வட்டக்கச்சியில் மூன்று பிள்ளைகளை கிணற்றில் தள்ளிவிட்டு தானும் தற்கொலைக்கு இளம் தாய் முயன்றமை, கத்திக்குத்துக்கு இலக்காகி இரண்டு குழந்தைகளின் தந்தை உயிரிழந்தமை போன்ற சம்பவங்களுக்கு போதைப்பொருள் பாவனையே காரணம். போதைப்பொருள் பாவனையாளர்களால் எமக்கும் பல்வேறு வகையில் அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. எனவே எங்களது பிரதேசத்தில் அதிகரித்து வருகின்ற சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் மதுபானம் என்பவற்றை தடுத்து நிறுத்த சம்மந்தப்பட்ட அனைவரும் முன்வர வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். விழிப்புணர்வு நடவடிக்கையின்போது கடந்த வாரம் பதின்ம வயதினரால் கொலைசெய்யப்பட்ட அருளம்பலம் துஸ்யந்தனின் புகைப்படத்துடனான கறுப்புப்பட்டியை மாணவர்கள் சீருடையில் அணிந்திருந்தனர். (வ-214,222)

# கோயிலாக்கண்டி விவசாயிகளின் தரவுகள் பதிவு

சாவகச்சேரி, மார்ச் 16

நாவற்குழி கோயிலாக்கண்டி கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான தரவுகள் பதிவு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் கோயிலாக்கண்டி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

கோயிலாக்கண்டி கமக்கார அமைப்புக்குட்பட்ட அனைத்து விவசாயிகளும் கடந்த வருடம் ஏக்கர் வரி செலுத்திய பற்றுச்சீட்டு, சந்தாப்பணம் செலுத்திய பற்றுச்சீட்டு, குடும்ப அட்டையின் முன்பக்க பதிவுப்பிரதி அல்லது குடும்ப அங்கத்தவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் மற்றும் பிறந்த திகதி ஆகியவற்றுடன் விவசாய வங்கிப் புத்தகத்தையும் கொண்டுவருமாறு அமைப்பின் தலைவர் தெரிவித்தார். (ய-9)

# மத்திய சுற்றாடல் அதிகார சபை ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில்

கொழும்பு, மார்ச் 16

மத்திய சுற்றாடல் அதிகார சபையை ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர தீர்மானித்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுற்றாடல் மாசு மற்றும் அழிவு தொடர்பில் சமூகத்தில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அதனைத் தடுப்பதற்கு சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாது இருப்பதால், ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதியின் இந்தத் திட்டத்துக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர இணக்கம் தெரிவித்துள்ளதுடன், தனக்கு வேறு அமைச்சு பதவி ஒன்றைத் தருமாறு கோரியுள்ளார் எனவும் தெரியவருகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான மஹிந்த அமரவீர அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து அண்மையில் விமர்சனக் கருத்துக்களை வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

# கடும் கட்டுப்பாடுகளுடன் பங்குனித் திங்கள் உற்சவம்

சாவகச்சேரி, மார்ச் 16

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் சுகாதார நடைமுறைகளுடன் எளிமையான முறையில் இடம்பெற்றது.

காலையில் பெருமளவு அடியார்கள் வருகை தந்திருந்த நிலையில் கட்டம் கட்டமாக அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டு நேர்த்திகளை நிறைவேற்றிய பின்னர் மறுபக்க வாசல் ஊடாக வெளியேறினர். முற்பகல் 10 மணி வரை அடியார்களின் வருகை அதிகமாக இருந்த போதிலும் மட்டுப்படுத்தப்பட்ட அடியார்களே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டதால் பக்தர்கள் நீண்ட நேரம் காத்திருந்து ஆலயத்தின் உள்ளே சென்றதைக் காணமுடிந்தது. ஆலயத்தில் அர்ச்சனைப் பொருள்கள் விற்பனை நிலையம் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள் அமைக்கப்படவில்லை என்பதுடன் ஆலய வளாகத்தில் நேர்த்தி செய்வோர் தவிர்ந்த ஏனையோரைக் காணவும் முடியவில்லை. (வ-9)

# ஆறுமுகத்தான்குள மக்களுக்கு விவசாயக் காணி வழங்குங்கள்

## கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் மகஜர்

முல்லைத்தீவு, மார்ச் 16

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் ஆறுமுகத்தான்குளம் கிராம மக்களுக்கு விவசாயக் காணி வழங்குவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் உ.றனிஸ்லா கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆறுமுகத்தான்குளம் கிராம மக்களுக்கு விவசாயக் காணி இல்லை என்பது தாங்கள் அறிந்த விடயம். ஏனெனில் கடந்த நான்கு வருட காலமாக இது தொடர்பாக தங்களுக்கு தெரியப்படுத்திக்கொண்டே இருக்கின்றேன். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் என்னால் சமுகமளிக்க முடியாது என்பதால் கடிதம் மூலம் இதனைத் தெரியப்படுத்துகின்றேன்.

இறுதியாக நடைபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தக் கிராம மக்களின் காணிப் பிரச்சினை தொடர்பாக நான் வினா எழுப்பிய போது வனவளத் திணைக்களத்திடம் நித்தகைக்குளம் மற்றும் வீரங்குளம் என்பன வற்றின் கீழுள்ள விவசாய நிலங்களை விடுவிக்கக் கோரியுள்ளது எனவும், அந்தக் காணிகளை விடுவித்தவுடன், ஆறுமுகத்தான்குளம் கிராம மக்கள் அனைவரையும் முன்னுரிமைப்படுத்தி விவசாய நிலம் வழங்கப்படும் எனத் தங்களாலும் பிரதேச செயலாளராலும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இது மகிழ்ச்சியான விடயமாக இருந்தாலும் கடந்த மூன்று வருட காலமாக வனவளத் திணைக்களத்தால் ஏன் இந்தக் காணிகளை விடுவிக்க முடியவில்லை?

நித்தகைக்குளம், வீரங்குளம் ஆகிய குளங்களின் கீழ் காணப்படுகின்ற வயல் நிலங்களை விரைவாக விடுவித்து விவசாயக் காணிகளற்று உள்ள இக் கிராம மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் தங்களிடம் வேண்டி நிற்கின்றேன் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-13)

# 86 தங்க பந்துகளுடன் இருவர் விசாரணையில்?

கொழும்பு, மார்ச் 16

புதையலில் இருந்து பெற்ற 50 கிராம் தங்கப் பந்துகள் என்று கூறி குறித்த தொகைப் பந்துகளை ஹோமாகம பிரதேச மக்களுக்கு விற்பனை செய்ய முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹோமாகமவில் இருந்து மோட்டார் வாகனத்தில் வந்த நால்வர் இதனைப் பெற்றுக் கொண்டு பணம் வழங்க முயற்சித்தபோது கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களை சோதனையிடும் போது அதில் 86 பந்துகள் காணப்பட்டுள்ளன. எனினும், அவை போலியான தங்கப் பந்துகளா என இதுவரையில் உறுதி செய்யப்படவில்லை. அதன் தொல்பொருள் பெறுமதியை பெற பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (த-இ)

## எமக்கு ஏன் இரங்கவில்லை?

கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான தலைவர் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு 'காட்டிக் கொடுப்பவர்' என்னும் முத்திரையைக் குத்தியுள்ளது கோத்தாபய அரசு. தமிழ் மக்களுக்கும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கும் இதுவரை காலமும் குத்தப்பட்டு வந்த இந்த முத்திரை தற்போது பேராயரை நோக்கியும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பில் இதுவரை நீதி நிலைநாட்டப்படவில்லை. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கடந்த இரண்டு வருடங்களாகவே தன் சமூகத்துக்கான நீதியை எதிர்பார்த்துக் காத்திருந்தார். நீதியைத் தேடுவதில் தன்னை முழு மூச்சாக ஈடுபடுத்தினார். பல தடவைகள் அதுதொடர்பில் வலியுறுத்தினார். பல சந்திப்புக்களை நடத்தினார். எனினும் இலங்கையில் இனியும் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை அற்றவராகவே 'ஈஸ்டர் தாக்குதல்களுக்கு நீதி தேடி இனி சர்வதேசத்திடம் செல்வோம்' என்று அண்மையில் தெரிவித்திருந்தார். இதையடுத்து கோத்தாபய அரசின் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, கர்தினால் இலங்கையை சர்வதேசத்திடம் காட்டிக்கொடுக்கின்றார் என்று குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு தரப்பு அல்லது ஒரு இனக்குழுமம் பெரும் பாதிப்பை அல்லது தாக்குதலை எதிர்கொள்ளும்போது அதற்கான நீதி உரிய கட்டமைப்புக்கள் மூலம் விரைந்து வழங்கப்பட வேண்டும். ஆட்சியாளர்களுக்கு அழகும் அதுவே. அவ்வாறு உள்நாட்டில் நீதி கிடைக்காத பட்சத்தில்தான் அவர்கள் நீதி தேடி, பிறிதொரு இடத்துக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்படுகிறது. ஒருவேளை பாதிக்கப்பட்ட தரப்புக்கு நியாயமான அடிப்படையில் நீதியும் தீர்வும் வழங்கப்படும் பட்சத்தில் 'சர்வதேசம்' என்ற வார்த்தைப் பயன்பாடே அங்கு தேவைப்படாது. தமிழர்களுக்கு ஏற்பட்ட துன்பியலும் இதுதான்.


இதே தரப்பினர்தான் 'ஈஸ்டர் தாக்குதலை அடுத்து இனக் கலவரமொன்று இந்த நாட்டில் ஏற்படாமல் இருந்தமைக்கு, பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, குறித்த விவகாரத்தைக் கையாண்ட பக்குவம்தான். முதன்மைக் காரணம்' என்று பாராட்டியிருந்தனர். அன்று நாட்டுப்பற்று மிகுந்த நபராக கோத்தாபய தரப்பினரின் கண்களில் புலப்பட்ட பேராயர், இன்று காட்டிக்கொடுப்பவராகத் தெரிகின்றார் என்றால், அது நிச்சயம் நகைப்புக்கு உரியதே.

அதேநேரம் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இனியாவது இதய சுத்தியுள்ளவராகச் செயற்பட வேண்டும் என்பதையும் ஈஸ்டர் தாக்குதல் விவகாரங்கள் உணர்த்தி நிற்கின்றன.

இரண்டு வருடங்களின் முன்பு நடைபெற்ற ஈஸ்டர் தாக்குதல்களுக்கு நீதிகேட்டு சர்வதேசம் வரைக்கும் செல்லத் துணிந்த பேராயர், இறுதிப்போரில் கொல்லப்பட்ட மக்களுக்கான நீதி தொடர்பில் இதுவரை பெரிதான அக்கறை எதையும் வெளிப்படுத்தாது மௌனித்து இருப்பது ஏன்?. இறுதிப் போரின் போதும், அதன் முன்னரும்கூட ஏராளமான கத்தோலிக்க ஆலயங்கள் குண்டுவீசித் தகர்க்கப்பட்டன. எத்தனையோ மக்கள் தேவாலயங்களில் வைத்துக் கொல்லப்பட்டனர். குருதிச் சகதியில் தேவாலயங்கள் பல நனைந்துள்ளன. நவாலி சென். பீற்றர் தேவாலயம் முதல் முள்ளிவாய்க்கால் தேவாலயங்கள் வரை இதற்கான எடுத்துக்காட்டுகள் பரந்து நீள்கின்றன. ஆனால் இவையெல்லாம் கர்தினாலின் இதயத்தை கனக்கச் செய்யவில்லை. இவற்றுக்காக கர்தினாலின் கண்கள் கலக்கமடையவில்லை.

ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி தேவை. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் பேராயர் தன்னை ஒரு மதத் தலைவராகவோ, பொதுமைப்பாடான தலைவராகவோ அல்லாமல் வெறும் 'சிங்கள கத்தோலிக்க' தலைவர் என்ற வரையறைக்குள் நின்றுகொண்டு நீதியைத் தேடுவது தான் வேதனையானது.

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்டபோது, வானத்தை அண்ணார்ந்து பார்த்து 'ஏலி ஏலி லாமா சபக்தானி' என்றுரைத்தாராம். இதற்கு 'என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்று பொருள். இதைத்தான் இன்று ஒவ்வொரு சிறுபான்மை மக்களும் கர்தினாலைப் பார்த்து உரைக்கின்றனர். 'ஏன் எம்மைக் கைவிட்டீர்?'.




# தமிழ்த் தொல்பொருள்கள் இலங்கையில் மிக அதிகம்

## வேந்தர் சி.பத்மநாதன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 16**

**இலங்கையில் எண்ணிலடங்காத தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட தொல்பொருள் சின்னங்கள் இருக்கின்றன என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தரும், மூத்த பேராசிரியருமான கலாநிதி சி.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.**

யாழ். பொது நூலகத்தில் 'ஆதி இலங்கையில் இந்து சமயம்' எனும் தலைப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேருரையின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் பிராமி எழுத்து வடிவங்கள் பொதிந்த தொல்பொருள் சின்னங்கள் இலங்கையில் எண்ணிலடங்காத அளவு உள்ளன. இந்தப் பிராமி எழுத்து வடிவங்கள் மத்திய கிழக்கில் இருந்து வணிகர்கள் மூலம் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டு நாளடைவில் இலங்கைக்கு கடத்தப்பட்டு இருக்கின்றன.

குறிப்பாக, அசோக மன்னன் இந்தியாவை ஆண்ட காலப்பகுதியில் தான் பிராமி எழுத்துக்கள் இந்தியாவில் வெளிப்பட ஆரம்பித்தன. பிராமி எழுத்துக்களில் குறிப்பாக ழ,ள,ற,ன எழுத்துக்கள் சிறப்பானவை.

மேலும், பெருங்கல் பண்பாட்டுக் காலமாகிய கி.மு. 900 - கி.பி. 300 காலப்பகுதியில் நாகரின் சிவலிங்க வழிபாடு, நாகலிங்க வடிவங்கள், விநாயகர் வழிபாடு, முருக வழிபாடு மற்றும் அம்மன் வழிபாடு என்பவை இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் எனக்கு கிடைத்துள்ளன - என்றார். (ற-319)

# ஒரு லட்சம் காணித்துண்டுகளே ஆவண மாற்றத்துக்கு காரணம்!

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 16

இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன என சொல்லப்படும் ஒரு லட்சம் காணித்துண்டுகள் தமிழர்களுக்கு செல்லக்கூடாது என்பதற்காகவே, காணி ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டன என்று தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்,

வவுனியாவில் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

நிலைமாறு கால நீதியின் பிரகாரம், காணிகள் விடுவிக்கப்படுகின்றன என அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அது முழுமை யடைந்திருக்கவில்லை. குறிப்பாக காங்கேசன்துறைப்பகுதியில் விடுவிக்கப்பட்டன என சொல்லப்பட்ட காணிகளில் இராணுவ முகாம்களும், பொலிஸாரின் விடுதிகளும் இருக்கின்றன. அத்துடன் வடக்கில் கரையோரப்பகுதிகளை மையமாகவைத்து காணிகள் கபளீகரம் செய்யப்படுகின்றன.

வடமாகாணத்துக்கான காணி ஆவணங்கள் யாழ். மாவட்டச் செயலகத்தில் இருந்த நிலையில், வடமாகாணத்துக்கு தொடர்பே இல்லாத இன்னொரு மாகாணத்துக்கு காணி ஆவணங்கள் மாற்றப்பட்டமை பெரிய கேள்வியை எழுப்பியுள்ளது. குறிப்பாக இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படும் ஒரு லட்சம் காணித்துண்டுகளுக்காக வடபகுதியில் அதிகமான இளைஞர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

எனவே அவற்றை பங்கீடுசெய்து வழங்கினால் தமிழர்களுக்கே அந்தக் காணிகள் சென்றுவிடும் என்ற வகையில் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த முதலாளிகளி களுக் கும் தனவந்தர்களுக்கும் வழங்குவதை நோக்கமாக்கொண்டே அந்த ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டுள்ளன எனக் கருதுகிறோம் - என்றனர். (ஐ-110)

# இலங்கை அரசைக் காப்பாற்றும் வகையிலே தீர்மானம் அமையும்

## கூட்டமைப்பையும் தாக்கி கஜேந்திரகுமார் ஆவேசம்

**யாழ்ப்பாணம், மார்ச் 16**



**இந்த இன அழிப்பைச் செய்தவர்களைத் தொடர்ந்தும் காப்பாற்றும் வகையிலேயே ஜெனிவாத் தீர்மானம் இருக்கப் போகின்றது என்பது தான் உண்மை. இந்த உண்மையை எமது மக்கள் புரிந்து துரோகத்தை முன்னெடுப்பவர்களை இனங்கண்டு அரசியல் அரங்கிலிருந்து ஒதுக்காதுவிட்டால் இந்த இனம் அழியும். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

கொக்குவிலில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

3 தமிழ்க் கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து கடந்த மாதம் 15ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தலைவர் மற்றும் உறுப்பு நாடுகளின் உயர்ஸ்தானிகர் ஆகியோருக்கு எழுதிய கடிதத்திலே உள்ள விடயங்கள் ஜெனிவாத் தீர்மானத்திலே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. என்று சுமந்திரன் கூறியிருக்கிறார். அந்தக் கடிதத்திலே பொறுப்புக்கூறலை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியில் எடுக்க வேண்டும் என்பதை நாங்கள் தெளிவாகக் கூறியிருக் கிறோம். உறுப்பு நாடுகள் பொறுப்புக்கூறலை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற அடிப்படையிலே அவர்கள் செயற்பட வேண்டும். அந்தக் கோரிக்கையை 46 ஆவது கூட்டத்தொடரில் கொண்டுவரவுள்ள தீர்மானத்தையும் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் விடப்பட வேண்டும் என்றும் அந்த கடிதத்திலே எழுதியிருந்தோம். ஆனால் அந்த கடிதத்தில் எழுதப்பட்டதற்கு மாறாக, இந்தத் தீர்மானத்திலே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கோ அல்லது சர்வதேச குற்றவியல் பொறிமுறை ஒன்றின் ஊடாகவோ இந்த பொறுப்புக்கூறல் இலங்கைத்தீவில் நடைமுறைப்படுத்தப்படும் என்ற விடயம் வலியுறுத்தப்படவில்லை.

மாறாக கடந்த 30/1 தீர்மானத்தின் உள்ளகப் பொறிமுறையில் நம்பிக்கை இல்லை என்ற அடிப்படையில் சுமந்திரனே கூறுகின்ற கலப்பு பொறிமுறை என்ற அடிப்படையிலே தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உண்மையில் அப்படி இல்லை. ஆனாலும் உள்ளகப் பொறிமுறையில் நம்பிக்கை இல்லை என்ற அடிப்படையில் ஒரு சரத்து ஒன்று அதிலே சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த முறை உள்ளகப் பொறிமுறையிலே என்ற அடிப்படையில் எந்தவொரு கருத்தும் இந்தத் தீர்மானத்தில் இல்லை மாறாக இந்த அரசு தான் பொறுப்புக்கூறலை முன்னெடுக்க வேண்டும். அரசுக்கு அந்தப் பொறுப்பு உள்ளது. என்ற அடிப்படையில் தான் இந்தத் தீர்மானம் வரையறுக்கப்பட்டிருக்கின்றது.

எம்மைப் பொறுத்த வரையிலே இந்தத் தீர்மானம் மிகப்பெரிய ஏமாற்றம் என்பது மட்டுமல்ல, தமிழ் மக்கள் முதுகில் குத்துகின்ற தீர்மானமாகவே உள்ளது என்றுதான் இதைப் பார்க்கிறோம். இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை.

இவ்வளவு வருடங்களுக்குப் பிறகும் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரே, இலங்கை பொறுப்புக்கூறலை செய்ய மறுக்கிறது என்ற விடயத்தை கூறிய பின்னும், இலங்கையைப் பொறுப்புக்கூறக் கேட்பது முதுகில் இல்லை முன்னாலே குத்துகின்ற செயற்பாடாகும். இந்த விடயத்தை ஆதரிக்குமாறு கேட்பவர்கள் அனைவரும் இந்த இனத்துக்கு துரோகமளிக்கிறார்கள் என்பதில் எமது மக்களுக்கு எந்த வித சந்தேகமும் இருக்கக்கூடாது. இந்த இன அழிப்பைச் செய்தவர்களைத் தொடர்ந்தும் காப்பாற்றும் வகையிலே இந்தத் தீர்மானம் இருக்கப் போகின்றது என்பது தான் உண்மை. இந்த உண்மையை எமது மக்கள் புரிந்து கொண்டு துரோகத்தை முன்னெடுப்பவர்களை இனங்கண்டு அரசியல் அரங்கிலிருந்து ஒதுக்காது விட்டால் இந்த இனம்அழியும். இந்தத் தீர்மானத்தை எதிர்க்கின்றவர்கள் ராஜபக்சக்களின் ஊதுகுழல் என்று சுமந்திரன் கூறியிருக்கிறார். இந்த இனத்தை 10 வருடமாக ஏமாற்றியது கூட்டமைப்பும் சுமந்திரனும் தான் என்பதை தமிழ் மக்கள் மறந்து விடக்கூடாது - என்றார்

(ப-320)



இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் நேற்று 16ஆவது நாளாகவும் தொடர்ந்தது. (ப-20)

## அம்பிகையின் போராட்டத்துக்கு கமல்ஹாசன் ஆதரவு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி பிரித்தானியாவில் ஈழத்து தமிழ் பெண் அம்பிகை செல்வகுமார் ஆரம்பித்த உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும் நடிகருமான கமல்ஹாசனும் ஆதரவளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது ருவிற்றர் பக்கத்தில், இன அழிப்புக்கு நீதிகோரி லண்டனில் ஈழத்துச் சகோதரி அம்பிகை செல்வகுமார் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி முதல் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார். நீதிக்காகப் போராடும் இப் பெண்மணியின் குரலுக்கு பிரிட்டன் செவிமடுக்க வேண்டும். சகோதரியின் போராட்டம் வெல்ல தமிழர்கள் தோள் கொடுக்க வேண்டும் என்று பதிவிட்டுள்ளார்.

பிரித்தானியாவின் தலைநகர் லண்டனில் இடம்பெறும் சாகும் வரையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நேற்று 17ஆவது நாளாகவும் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-இ)

## அம்பிகையின் போராட்டத்துக்கு ஆதரவாக ஜேர்மனியில் பேரணி

கொழும்பு, மார்ச் 16

அறப் போராளி அம்பிகையின் உணவுத் தவிர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தக் கோரியும் ஜேர்மனியின் தலைநகர் பேர்லின் மற்றும் டுசில்டோர்ப் நகரங்களிலும் மக்கள் பேரணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

'ஈழத் தமிழர்களைக் கூட்டுச் சதி ஊடாக இனப்படுகொலை செய்தவர்களிடம் நீதியை எதிர்பார்க்க முடியாது! தமிழினம் புத்திக் கூர்மையுடன் தொடர்ந்து போராட வேண்டிய அவசியம் இருக்கின்றது. ஆகவே அம்பிகையம்மாதன் உணவுத் தவிர்ப்பு அறப் போராட்டத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஈழத் தமிழினம் இழந்த உயிர்கள் அனைத்தையும் பயனுள்ளதாக்கிக் கொள்வதற்கு வேகம் கொண்டவர்களும் புத்திஜீவிகளும் தொடர்ந்து போராட வேண்டியிருக்கின்றது. எமது இளைய சமுதாயத்துக்கு பல உண்மைகள் எடுத்துக் காட்டப்பட வேண்டியுள்ளது. ஆகவே அம்பிகை அம்மாவை எழுந்து வரும்படி அழைக்கின்றோம்' என்றும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ப)

## போராடுவோர் விபரம் கேட்டு மட்டு. பொலிஸார் அச்சுறுத்து

மட்டக்களப்பு, மார்ச் 16

மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னால் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நடைபெறும் உண்ணாவிரதப் போராட்டத்தை முடக்கும் நோக்கில் நேற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸார் போராட்டக்காரர்களின் பெயர்களைக் கேட்டு அச்சுறுத்தியுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாமாங்க ஈஸ்வரர் ஆலயத்துக்கு முன்பாக சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நடைபெறும் இடத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸார் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில், போராட்டத்தில் அமர்ந்திருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் பெயர்களைக் கேட்டு அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர். இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நோக்கில் தொடர்ச்சியாக மட்டக்களப்பு பொலிஸார் பல்வேறு அச்சுறுத்தல்களை திட்டமிட்டு ஏற்படுத்தி வருகின்றனர். ஏற்கனவே உண்ணாவிரதப் பந்தலை இரவோடு இரவாக அகற்றிய பொலிஸார், தற்போது நடு வெயிலில் அமர்ந்துபோராடி வரும் தங்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றனர் என்று போராட்டக்காரர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ப)

## புதிய அலுவலர் பொறுப்பேற்பு

சாவகச்சேரி, மார்ச் 16

தென்மராட்சி பிரதேச சமூக சேவைகள் அலுவலராக கோப்பாய் பிரதேச செயலகத்தில் பணியாற்றிய திருமதி விஜயகுமாரி முகுந்தன் நேற்றுப் பொறுப்பேற்றார். வி.சண்முகநாதன் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்துக்கு இடமாற்றப்பட்டதையடுத்து அவர் நியமிக்கப்பட்டுள்ளார். (வ-9)



இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தவேண்டும் என்பதை வலியுறுத்தி லண்டன் நகரில் அம்பிகையால் ஆரம்பிக்கப்பட்ட உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் பேரியக்கத்தின் ஏற்பாட்டில் கல்முனை பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் 11ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. (ப-150)

# கிழக்கு மாகாணத்தில் மீண்டும் முஸ்லிம் காங்கிரஸின் ஆட்சி

## ஹரீஸ் எம்.பி. நம்பிக்கை

**அம்பாறை, மார்ச் 16**



**"கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுமானால் முஸ்லிம் காங்கிரஸே மீண்டும் ஆட்சி அமைக்கும். நாம் கூடிய ஆசனங்களைப் பெறுவதுடன் கூட்டுச் சேர்ந்து மீண்டும் ஆட்சி அமைப்பதற்கான வியூகங்களை வகுத்து களமிறங்குவோம்." இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸ் நம்பிக்கை தெரிவித்தார்.**

அம்பாறையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'முஸ்லிம் சமூகத்தை நிம்மதியாக வழி நடத்திச் செல்லும் ஆற்றலும், திராணியும் முஸ்லிம் காங்கிரஸிடமேயுள்ளது. இதனால் தான் இக்காலகட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸின் வகிபாகம் அவசியமென் பதை மக்கள் உணர்ந்துள்ளனர். கடந்த முறை கிழக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரம் முஸ்லிம் காங்கிரஸ் வசம் வந்தது போல் இம் முறையும் முஸ்லிம் காங்கிரஸே ஆட்சி அமைக்குமென்பதும் திடமாகும். ஆட்சி அமைப்பதில் கூட்டு ஏற்பட்டாலும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் நாம் கூடிய ஆசனங்களைப் பெறுவோம்.

இன்று முஸ்லிம் சமூகத்தைப் பலிக்கடாவாக்குவதற்காகப் பல நிகழ்ச்சி நிரல்கள், பல்வேறு சக்திகளால் சதியாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

இத்தகைய இக்கட்டான காலகட்டத்தில் நாம் உணர்ச்சிக் கொந்தளிப்புகளுக்கு ஆட்படாது மிகவும் நிதானமாகச் செயற்பட வேண்டும் -என்றார். (ஐ-30)

# பாதாள உலகத் தலைவன் டுபாயில் உயிரிழப்பு?

கொழும்பு, மார்ச் 16

பிரபல பாதாள உலகத் தலைவனும், போதைப் பொருள் கடத்தல்காரருமான கெசல்வத்த தினுக எனும் ஆர்.ஏ.தினுக மதுஷான் டுபாயில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுட்டுக்கொலை செய்தல், அச்சுறுத்தி கப்பம் பெறுதல், போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாலியல் துர்நடத்தை உள்ளிட்ட பாதாள உலகத்துடன் தொடர்புபட்ட பல திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் கெசல்வத்த தினுக பின்னணியில் செயற்பட்டிருந்தார் என்று நம்பப்படும் நிலையில், அவர் பொலிஸாருக்கு அவசியமான சந்தேகநபராக விளங்கினார். கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் அவர் டுபாய்க்குத்தப்பிச்சென்றிருந்த நிலையில், கடந்த இரு நாள்களுக்கு முன்னர் டுபாயில் உயிரிழந்துள்ளார் என்று உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன என்று உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தினுக உயிரிழந்துள்ள தகவல்கள் கசிந்த நிலையில், வாழைத்தோட்டம் பொலிஸ் நிலைய அதிகார எல்லைக்கு உட்பட்ட, திட்டமிடப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் பொலிஸ் பிரிவுக்கு அருகே உள்ள கெசல்வத்த தினுகவின் வீட்டில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. தினுகவின் உயிரிழப்பு தொடர்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண விடம் வினவிய போது, அது குறித்து உத்தியோக பூர்வமான அறிவிப்பு பொலிஸ் திணைக்களத்துக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ப)

# தனிமைப்படுத்தலை மீறவில்லை; அமைச்சர் நாமல் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16



தனிமைப்படுத்தல் விதிகளை மீறிச் செயற்பட்டார் என்று வெளியாகிய குற்றச்சாட்டுகளை விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச நிராகரித்துள்ளார்.

டுபாயில் இருந்து நாடு திரும்பியவுடன் வீட்டிலேயே தனிமைப்படுத்திக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் காணப்பட்ட போதிலும், எனது மனைவி மற்றும் குழந்தையின் நலனுக்காக அதனை நான் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட தனிமைப்படுத்தல் நிலையமொன்றில் நான் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளேன். வெளிநாட்டிலிருந்து திரும்பியதும், தனிமைப்படுத்தல் விதிகளை மீறி, வீடு சென்று விட்டேன் என சமூக ஊடகங்களில் வெளியாகிய செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# ஜப்பானில் தடுப்பிலிருந்த இலங்கைப் பெண் சாவு

கொழும்பு, மார்ச் 16

ஜப்பானின் நாகோயாவில் அமைந்துள்ள குடிவரவு தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 33 வயதான இலங்கைப் பெண்ணொருவர் கடந்த 6 ஆம் திகதி உயிரிழந்துள்ளார் என்று டோக்கியோவில் உள்ள இலங்கைத் தூதரகம் உறுதி செய்துள்ளது.

அவரது விசா காலாவதியானதால் கடந்த ஓகஸ்ட் முதல் அவர் தடுப்பு மையத்தில் இருந்தார் என்று தூதரக செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

இலங்கையின் கம்பஹாவைச் சேர்ந்த இவர் 2017 ஆம் ஆண்டு தனது கல்வி நடவடிக்கைகளுக்காக ஜப்பானுக்குச் சென்றிருந்தார். எனினும் விசா காலாவதியானதால், அவர் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் குடிவரவு தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அங்கு அவருக்கு வழங்கப்பட்ட உணவு குறித்து அவர் தொடர்ந்தும் முறைப்பாடு அளித்தார் என்றும், அந்த உணவால் அவர் பலவீனமடைந்தார் என்றும் கூறப்படுகிறது. ஆறு சந்தர்ப்பங்களில் மருத்துவர்கள் அந்தப் பெண்ணை பரிசோதித்தனர் என்றும், குறைந்தபட்சம் அவர் இரண்டு முறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் குடிவரவு அதிகாரி தெரிவித்துள்ளார் என்று தூதரக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அவரது உயிரிழப்புக்கான உறுதியான காரணங்கள் இதுவரை கண்டறியப்படாத நிலையில், இது குறித்து ஏற்கனவே ஜப்பானிய வெளியுறவு அமைச்சகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று தூதரக செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். (ப)

# தொண்டமானின் குடும்பத்துக்கு இராஜாங்க அமைச்சர் பாராட்டு

கொழும்பு, மார்ச் 16

மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக தூரநோக்கு சிந்தனை அடிப்படையில் செயற்பட்ட தொண்டமான் குடும்பத்தாருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் பிள்ளைகளின் வாழ்வு மேம்படவேண்டும் என்ற நோக்கில் சிரேஷ்ட தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் முதல் தொண்டமான் குடும்பத்தைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் தூரநோக்கு சிந்தனை அடிப்படையில் செயற்பட்டனர். இதற்காகவே தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளிட்டவற்றை உருவாக்கினர். இதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

இளம் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானும் தற்போது சரியான வழியைத் தெரிவுசெய்துள்ளார். கல்வித்துறை மேம்படாவிட்டால் சமூகம் மேம்படாது. எனவே, கல்வியை ஒதுக்கிவிட்டு அபிவிருத்திகள் செய்தால் அவை பயன்தராது. அந்தவகையில் கல்வி மேம்பாட்டுக்காக ஜீவன் செயற்படுவது சிறப்பு. கல்வி கற்றால் அதன் மூலம்கிடைக்கும் அறிவை எவராலும் களவாட முடியாது. கல்வியால் சாதிக்க முடியும். எனவே, கல்வித் திட்டங்கள் தொடர்பில் ஜீவன் தொண்டமான் முன்வைக்கும் யோசனைகளை நாம் மதிக்கின்றோம். அவற்றை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் - என்றார். (ப)

# சுற்றுச் சூழல் பாதிப்பு தொடர்பில் தகவல் வழங்கினால் சன்மானம்

கொழும்பு, மார்ச் 16

சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிரான சுற்றிவளைப்புக்கள் கடுமையாக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காடழிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோரைக் கைதுசெய்யும் நோக்கில், சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நபர்கள் தொடர்பில் பொதுமக்கள் 1997 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி, தகவல்களை வழங்க முடியும்.

இவ்வாறு தகவல்களை வழங்குவோருக்குரிய சன்மானமும் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

# 16 ஆயிரம் பொலிஸார் களத்தில்; கைதாகினர் 3,108 பேர்

கொழும்பு, மார்ச் 16

நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கையில் 3 ஆயிரத்து 108 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் இந்த சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஆயிரத்து 112 பேரும், வாகனங்களின் சாரதிகள் 454 பேரும், போதைப் பொருள் வைத்திருந்தமைக்காக 469 பேரும், கலால் கட்டளைச் சட்டத்தை மீறியதற்காக 523 பேரும் இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க வாரந்தோறும் அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையேனும் இவ்வாறான விசேட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ப)

# முக்கொம்பனில் குரங்குத் தொல்லை

பூநகரி - முக்கொம்பன் கிராமத்தில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். வீடுகளுக்குள் திடீரென நுழையும் குரங்குகள் சமையலறைப் பொருள்கள் தொடக்கம் வீட்டிலுள்ள பெறுமதிமிக்க பொருள்கள் வரை அனைத்தையும் சேத மேற்படுத்தி விட்டுச் செல்கின்றன.

வீட்டிலுள்ள நெல் மூட்டைகளையும் கிழித்து சேதப்படுத்துகின்றன. இந்த குரங்குக் கூட்டத்தை விரட்டியடிப்பதில் நாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றோம். இதுதொடர்பில் கிளிநொச்சியிலுள்ள வனஜீவராசிகள் திணைக்களம் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-12)

# கொரோனாவிலிருந்து நலம்பெற மருதனார்மடத்தில் வழிபாடு!

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், இலங்கையில் வாழும் மக்களும், உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனாத் தாக்கத்திலிருந்தும், அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இறை ஆசி வேண்டி நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் மருதனார்மடம் அருள்மிகு பல்லப்ப பைரவர் தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இந்த விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் பிரம்ம ஸ்ரீ ஸ்ரீகரசர்மாவின் அருளாசி உரையும், வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன. (ற)

# வடபகுதியில் 10 லட்சம் மக்களுக்கு செஞ்சிலுவை சங்கம் உதவிக்கரம்!

## யாழ். கிளைத் தலைவர் பெருமிதம்



**யாழ்ப்பாணம், மார்ச் 16**

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் சுமார் 10 இலட்சம் பேருக்கு தமது உதவித் திட்டங்களை வழங்கியுள்ளது என செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம் யாழ். தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1958 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டு இலங்கை செஞ்சிலுவை சங்கம் மக்களுக்கு தொடர்ந்து தன்னாலான சேவைகளை வழங்கி வருகிறது.

போர்க் காலத்தின் போதும் இயற்கை அனர்த்தங்களின் போதும் அல்லல்படும் மக்களுக்காக உடனடி உதவிகளை வழங்கியதுடன் அவர்களின் வாழ்வாதார தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் எமது சங்கம் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட புரேவிப்புயல் தாக்கத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலவு செய்துள்ளது.

யாழில் கொரோனா அனர்த்த நிலைகளின் போது பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள், கைதடி முதியோர் இல்லம் மற்றும் மருத்துவமனைகள் போன்ற இடங்களில் தொற்று நீக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்திருந் தது.

குறிப்பாக யாழ். கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான முகக்கவசம் மற்றும் கிருமி நீக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்ததுடன் பாடசாலைகளில் கொரோனா விழிப்புணர்வுப் பிரிவுகளையும் ஏற்படுத்தியிருந்தது.

ஆகவே, இலங்கை செஞ்சிலுவைச் சங்கமானது, பாதிக்கப்பட்ட மக்களை சமூகத்துடன் இணைக்கும் செயற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டு வருவதுடன், இலங்கையிலுள்ள அனைத்து மாகாணங்களிலும் பாதிக்கப்பட்டவர்களுக்காக தனது சேவையை விஸ்தரித்து வருகிறது - என்றார். (ற-20)

# வீட்டின் அயலவர்களால் திருடன் மடக்கிப் பிடிப்பு

கொடிகாமம், மார்ச் 16

வீட்டு ஜன்னல் மற்றும் கதவுகளை உடைத்துத் திருட முற்பட்ட நபரை அயலவர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்துக்கு அண்மையில் உள்ள வீட்டில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

கைதான சந்தேகநபரிடம் விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ-159,9)


# மரண அறிவித்தல்

## இராசரட்ணம் வசந்தலாராணி

(முன்னாள் அச்சுவேலி கலைமகள் பாலர் பாடசாலை ஆசிரியர்)



அச்சுவேலி தெற்கு, விக்னேஸ்வரா வீதியை பிறப்பிடமாகவும் ஜேர்மன், சுவிஸ் நாடுகளை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரட்ணம் வசந்தலாராணி 14.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி - லக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரகத்தி இராசரட்ணம் (சுதன் லக்ஷ்மி லொறி உரிமையாளர்) அவர் களின் அன்பு மனைவியும், சுதர்சனின் (சுதன் - சுவிஸ்) அன்புத் தாயும், உமாதர்சினியின் அன்பு மாமியும், வசந்தலாதேவி (தேவி), வசந்தகுமாரி (வசந்தா), வசந்தரூபி (செல்வம்), வனஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபினாஸ், காலஞ்சென்ற அபிஷேக், ஆகேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.03.2021 புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சுவிஸில் நடைபெறும். இந்நிகழ்வை லங்காசிறி இணையத்தில் நேரலையாக பார்வையிட முடியும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 10.02.1955

இறப்பு 14.03.2021

Himmenreich Strasse 4
8570 Weinfelden
Switzerland.

தகவல்:
சுதர்சன் (சுதன் - மகன்)
0041 7955 17714
பிரதீப்ஜெயச்சந்திரன்
077 224 7738
கேதீஸ்வரன் வேணுகோபன்
077 136 8382

# இன்றைய நாள்

**மேடம்:** உழைப்பால் உயர்வு வரும். தகவல் தொடர்பு ஆக்கம் தரும். செய்தி ஒன்று வந்து சந்தோஷத் திகைப்படையச் செய்யும். அக்கம் பக்கத்தினருக்கு உதவி செய்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**இடபம்:** எதிலும் நிதானமாக யோசித்து ஈடுபடுவது நல்லது. அடுப்பு, வாகனத்தில் விழிப்புடன் செயல்படுவது அவசியம். செலவுகள் குறையும். அலைச்சல் நன்மை தரும்.

**மிதுனம்:** சகோதரர்களால் திடீர் நன்மையும் லாபமும் வரும். புதிய வீடு, நிலம் வாங்குவீர்கள். பகைவரிடம் கவனம் தேவை. பணியாளர்களுக்கு செழிப்பான சூழ்நிலை உருவாகும்..

**கடகம்:** பேச்சாற்றலும், பண வரவும் கூடும். பணி சிறக்கும். குடும்பத்துக்கு நன்மைகள் நிகழும். தொழிலில் வளர்ச்சி உண்டு. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களுக்கு அனுகூலமான நாள்.

**சிம்மம்:** சிறிய சாதனை ஒன்று செய்வீர்கள். வாகனம் சேர வழிபிறக்கும். சொத்துகளால் வருவாய் கிடைக்கும். பக்தியில் தெளிவு பிறக்கும். அலைச்சல் கூடும்.

**கன்னி:** நீண்ட நாள் கனவு ஒன்று இன்றைக்கு நிறைவேறும். ஆபரணங்கள் சேரும். கலைஞர்களுக்கு நற்பெயர் கிடைக்கும். பொது நலப்பணிகளில் ஈடுபாட்டால் வரவேற்பு அதிகரிக்கும்..

**துலாம்:** உங்களின் செயல் ஒன்றால் குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். பயண வாய்ப்பு வரும். அவசியமானால் மட்டும் ஏற்கலாம். பொழுதுபோக்குகளில் ஈடுபட்டு குதூகலம் அடைவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்கள் உதவுவதால் கஷ்டத்திலிருந்து தப்புவீர்கள். கணவன் மனைவி உறவு நிலை சீராக இருந்து வரும். வெளிநாட்டுத் தொடர்பு பயன்படும். நன்மைகளைப் பெறுவீர்கள்.

**தனுசு:** எடுத்த விடயத்தில் வெற்றி பெறுவீர்கள். சொத்து சேரும். வசதிகள் பெருகும். பணியிட சகாக்கள் ஆதரவாக இருப்பர். பல வகைகளில் செல்வம் சேர்ந்து சேமிப்புக்கு உதவும்.

**மகரம்:** நன்மையும் தீமையும் கலந்து நிகழும். மகிழ்ச்சி உண்டு. புகழ் அதிகரிக்கும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். வெளிநாட்டில் இருக்கும் உறவினரால் புது வாய்ப்பு வரும்.

**கும்பம்:** ஏகப்பட்ட செலவுகள் வந்தாலும் சுலபமாக சமாளிப்பீர்கள். கவலைகள் தீர்ந்து புதிய பிரச்சினை வந்தாலும் தயாராக இருப்பீர்கள். நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்.

**மீனம்:** புதிதாய் ஒரு விடயத்தில் ஈடுபாடு உண்டாகும். உங்கள் செயல்பாடுகளுக்கு நன்கு வரவேற்பு கூடும். பல வித வேலைகள் சூழ்ந்தாலும் உற்சாகத்துக்கு குறைவில்லை.

# சீனி மோசடி தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு

## வலியுறுத்துகிறது எதிர்க்கட்சி



**கொழும்பு, மார்ச் 16**

**சீனிக்கான இறக்குமதி வரிச் சலுகை மூலம் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு மற்றும் இதன் மூலம் இடம்பெற்றுள்ள பெரும் மோசடி தொடர்பில் ஆராய்வதற்கு விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு அரசை வலியுறுத்துகிறோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சீனிக்கான இறக்குமதி வரி குறைப்பின் மூலம் அரசுக்கு ஏற்பட்ட ஆயிரத்து 595 கோடி ரூபா இழப்பை மறைப்பதற்காக வெவ்வேறு விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட ஆரம்பித்துள்ளனர். நிதி அமைச்சும் வர்த்தக அமைச்சும் ஒன்றின் மீது ஒன்று குற்றம் சுமத்திக் கொண்டிருக்கின்றன. இலங்கையில் மாதத்துக்கு 50ஆயிரம் தொன் சீனி மாத்திரமே இறக்குமதி செய்யப்படும். 2019ஆம் ஆண்டில் மாதத்துக்கு 46 ஆயிரம் தொன் சீனி இறக்குமதி செய்யப்பட்டது. எனினும் சீனி இறக்குமதி வரிச் சலுகையால் மோசடி இடம்பெற்ற காலத்தில் மாதமொன்றுக்கு 80 ஆயிரம் தொன் சீனி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இறக்குமதி வரிச் சலுகை மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக மோசடிக்கான பாதை அமைத்து கொடுக்கப்பட்டுள்ளமை இதன் மூலம் தெளிவாகிறது. 50 ரூபாவுக்கு அறிவிப்பட்ட வரி 25 சதமாகக் குறைக்கப்பட்டதன் ஊடாக பயன் பெற்றவர்கள் யார்? எனவே இந்தப் பெரும் மோசடி தொடர்பில் ஆராய்வதற்கு விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமிக்குமாறு அரசை வலியுறுத்துகின்றோம் என்றார். (ப)

# தவக்கால சிந்தனை

## தேவை செபமாலை

இன்றைய உலகிலே சாத்தானின் ஆதிக்கத்தை வீழ்த்த சக்தி தேவைப்படுகின்றது. அந்த சக்தி கடவுளிடமிருந்து எமக்குக் கிடைக்க வேண்டும். அந்த சக்தியை கடவுளிடமிருந்து பெற்றுத் தருவதுதான் செபமாலை. அன்றாட வாழ்க்கையில் குடும்பத்தில் பிரச்சனை, எதிரியின் ஆதிக்கத்தால் குடும்பத்தில் நிம்மதியில்லை, எமக்கு அதிலிருந்து விடுதலை வேண்டும் என நாம் எண்ணும்போது உடனடியாக நாம் செய்ய வேண்டிய காரியம் குடும்ப செபமாலையை ஆரம்பிப்பது. என்ன பிரச்சனைகள், தேவைகள் இருந்தாலும் குடும்பமாக, குழுக்களாக நாம் செபமாலையைச் சொல்ல வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் பாவங்கள் எதிரியினால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. எங்கும் எதிலும் ஆபாசம், நீலப்படங்கள், தீய எண்ணங்கள், பகிடி வதைகள், சதிகள், பணத்தாசைகள், நில அபகரிப்பு, குடிவெறி, பணத்துக்காக எதையும் செய்தல், அற்ப ஆசைகளுக்காக இடம்பெறும் சிறுசிறு விடயங்கள், சீரற்ற உறவுகள், துன்பத்துக்காக நடக்கும் கொலைகள், பிஞ்சு உள்ளங்களில் நஞ்சைத் தூவும் செயற்பாடுகள், சினிமா, தொலைக்காட்சித் தொடர்கள் சமூகம் என கெட்டுப்போய் உள்ளது. இவைகள் கெட்டதையே போதிக்கின்றன. தீயவர்களும், தீமைகளும், பாவங்களும், நன்மை என்ற போர்வையில் உலா வருகின்றன.

நம் ஆன்மாக்களை மிகுந்த எச்சரிக்கையுடன் நாம் பாதுகாக்க வேண்டும் எனில் செபங்களைத் தவிர வேறுவழியில்லை. திருப்பலி, செபமாலை, சிலுவை எனும் ஆயுதங்களை கையிலேந்தி நம் ஆன்மாக்களையும், பிறர் ஆன்மாக்களையும் பாவத்திலிருந்து மீட்கும் காலமாக இந்தத் தவக்காலத்தை மாற்றுவோம்.

மே.சைலேந்தினி
பாண்டியந்தாழ்வு

# நம்பகத்தன்மையற்ற தடுப்பூசியை இலங்கைக்கு கொண்டுவர முயற்சி!

## தென்னிலங்கை ஊடகம் தகவல்

கொழும்பு, மார்ச் 16

சினோபார்ம் கொரோனா வைரஸ் தடுப்பூசியை சீனாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகள் இடம்பெறுக்கின்றன என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகம் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையின் மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அமைப்பின் சிரேஸ்ட அதிகாரிகள் சிலர் பதவி நீக்கப்பட்டுள்ளனர். சீனாவிலிருந்து நமபகத்தன்மையற்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்ட தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டிலேயே இவர்கள் பதவிநீக்கப்பட்டுள்ளனர். இது சுகாதார அமைச்சுக்குள் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இந்த தடுப்பூசி குறித்த பாதுகாப்பு மற்றும் செயல்திறன் தரவுகள் எதுவும் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன- என்று தெரிவித்துள்ளது. (ஐ-இ)

# கழிவு தேயிலையுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு, மார்ச் 16

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள மாமாங்கம் பிரதேசத்தில் பாவனைக்கு உதவாத தேயிலைத் தூள்களை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட் டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

600 கிலோ தேயிலைத் தூள்கள் அவரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்று மாவட்ட குற்றவியல் விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ப)

# அம்பிகையுடைய அறப்போரில் பிரிட்டன் அக்கறையற்றுள்ளது

## சிவசக்தி ஆனந்தன் கவலை

**கிளிநொச்சி,, மார்ச் 16**

**தாயக உறவுகளுக்கு நீதி வேண்டி இரண்டு வாரங்களுக்கு மேலாக அறப்போர் நடத்திவரும் அம்பிகையின் உடல்நிலை மோசமடைந்துள்ள நிலையில் பிரிட்டன் அரசாங்கம் தொடர்ந்தும் மௌனமாக இருப்பது வேதனையளிக்கிறது என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழினத்துக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தல் உள்ளிட்ட நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அம்பிகை, கடந்த 15 நாள்களாக அஹிம்சை வழியில் போராட்டத்தை நடத்தி வருகின்றார். இவருடைய போராட்டத்தை வலுப்படுத்தும் முகமாகவும், அவருடைய நான்கு அம்சக்கோரிக்கைகளுக்கு மேலும் ஆதரவளித்தும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தின் அனைத்து பகுதிகளிலும், புலம்பெயர் தேசங்களிலும் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டங்கள் மற்றும் கவனவீர்ப்பு போராட்டங்கள் தொடர்ந்துகொண்டே உள்ளன. ஆனால் பிரிட்டன் அரசாங்கம் தொடர்ச்சியாக மௌனித்த நிலையிலேயே இருக்கின்றது. இவ்விதமான நிலையில் பிரிட்டன் அரசாங்கம் இருப்பதானது அதிர்ச்சியையும் வேதனையும் அளிக்கிறது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது நிகழ்த்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் பிரிட்டன் அறியாமல் இல்லை. அதுதொடர்பான ஆவணங்களையும் பிரிட்டன் கொண்டிருக்காமல் இல்லை. அதேநேரம் நீதியை எதிர்பார்த்திருக்கும் தமிழ் மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களையும், கோரிக்கைகளையும் பிரித்தானியா உணராமலில்லை. அவ்வாறான நிலையில் நியாயமான நீதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கும் வகையில் அம்பிகை செல்வகுமார் முன்வைத்துள்ள கோரிக்கைகள் அனைத்தையும் உள்ளீர்த்து நிறைவேற்றப்படவுள்ள இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் பிரேரணையை மேலும் வலுப்படுத்த வேண்டும். அவ்விதமான செயற்பாடே ஒட்டுமொத்த தமிழினத்தின் எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கும்- என்றுள்ளது. (ஜ-13)

# இந்திய - இலங்கை கடற்படைகளுக்கு நெருக்கமான ஒத்துழைப்பு அவசியம்

## கோபால் பாக்லே வலியுறுத்து

கொழும்பு, , மார்ச் 16

இலங்கை இந்தியாவுக்கு இடையிலான ஒட்டுமொத்த இருதரப்பு ஈடுபாட்டின் முக்கிய பகுதியாகக் காணப்படும் இருநாட்டு கடற்படைகளுக்கும் இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே வலியுறுத்தியுள்ளார்.

திருகோணமலை கடற்படை முகாம் மற்றும் கடல்சார் பயிற்சி நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் சென்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

திருகோணமலை கடற்படை முகாம் மற்றும் கடல்சார் பயிற்சி நிலையத்துக்கான 22 மில்லியன் ரூபா பெறுமதியான பயிற்சி உபகரணங்களை கடற்படையின் கிழக்கு கட்டளை தளபதியிடம் இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே கையளித்தார். 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதமளவில் இந்திய கடற்படைத் தளபதி இலங்கைக்கு வந்த போது , பிராந்திய கடற்படைகளின் திறனை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் இலங்கை கடற்படைக்கு பயிற்சி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன எனத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

# இந்திய உளவாளியே முன்னர் ஈஸ்டர் தொடர்பில் எச்சரித்தார்

## புரளிகிழப்புகிறது ஆங்கில ஊடகம்

கொழும்பு, மார்ச் 16

சஹ்ரான் ஹாசிமுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய அபுஹின்ட் என்ற இந்திய உளவாளியே ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் முன்கூட்டியே எச்சரித்தார் என ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகம் மேலும் தெரிவித்ததாவது,

இந்திய புலனாய்வுப் பிரிவினர் மூன்று தடவை துல்லியமான தகவல்களை வழங்கியிருந்தனர் என ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சஹ்ரானின் குழுவுக்குள் ஊடுருவிய அபுஹின்ட் என்ற இந்திய உளவாளியே தாக்குதல் தொடர்பில் முன்கூட்டியே எச்சரித்துள்ளார். 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4, 20 மற்றும் 21ஆம் திகதிகளில் தேசிய புலனாய்வு சேவையின் இயக்குநருக்கு அபுஹின்ட் மூலமாக எச்சரிக்கை தகவல் கிடைத்துள்ளது என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது எனவும் அவ் ஊடகம் தெரிவித்துள்ளது. (ற-இ)

# எண்ணெய் தாங்கிகளை பார்வையிட்டார் பாக்லே

கொழும்பு, மார்ச் 16

இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே திருகோணமலையில் உள்ள இலங்கை இந்திய எண்ணெய் நிறுவனத்தின் தாங்கிகளைப் பார்வையிட்டுள்ளார். திருகோணமலைக்கு நேற்று முன்தினம் பயணம் செய்தபோதே அவர் இதனைப் பார்வையிட்டுள்ளார். (ப)

# கொழும்பில் பெரும் தீ; 50 வீடுகள் சேதம்

கொழும்பு, மார்ச் 16

கிராண்ட்பாஸ், காஜிமாவத்தை குடியிருப்பு பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 40 தொடக்கம் 50 வரையான வீடுகள் சேதமடைந்துள்ளன. சுமார் 250 தொடர் வீடுகள் இப் பகுதியில் அமைந்துள்ளதுடன், இந்த தீ விபத்தானது நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் ஏற்பட்டுள்ளது என கொழும்பு தீயணைப்பு சேவைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். தீ விபத்தைக் கட்டுப்படுத்த ஆறு தீயணைப்பு வாகனங்கள் விரைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.

விபத்தில் எந்தவொரு உயிர் சேதங்களும் ஏற்பட வில்லை என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன், விபத்துக் கான காரணம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (வ-இ)

# தனிநபரின் விருப்பத்துக்கு சட்டத்தை மாற்றமுடியாது!

## கமால் குணரட்ண தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

தனிநபர் ஒருவரின் விருப்பத்துக்கு ஏற்ப நாட்டின் சட்டங்களை மாற்ற முடியாது.

தேசிய பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சட்டத்தில் மாற்றங்களைச் செய்யவேண்டுமென்றால் நிபுணர்கள் குழு அதனை ஆராய்ந்த பின்னரே மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் . இவ்வாறு பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய பாதுகாப்புக்கான அதிகாரமளிக்கப்பட்ட அமைப்பு என்ற அடிப்படையில் குரோத அரசியலுக்கான விதைகளைத் தூவி சட்டத்தை மீறி பொதுமக்கள் பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்த முயலும் எவரையும் கைதுசெய்யத் தயங்கமாட்டோம்.

தங்கள் பதவிகளுக்கு அப்பால் இந்த நாட்டின் பிரஜைகள் அனைவரும் நாட்டின் சட்டங்களை மதிக்கவேண்டும், தனிநபர் ஒருவரின் விருப்பங்களுக்காக சட்டங்களை மாற்றமுடியாது- என்றார். (ற-இ)

# ஆயிரம் ரூபாவைப் பெற்றுத்தந்து சலுகைகளை பறிக்கும் அபாயம்

## பழனி திகாம்பரம் எம்.பி எச்சரிக்கை



நுவரெலியா, மார்ச் 16

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா கிடைத்துவிட்டது என சிலர் மார்தட்டுகின்றனர். ஆனால் வேலை நாள்கள் குறைக்கப்படும் என தோட்டக் கம்பனிகள் அறிவித்து வருகின்றன. தொழில் சலுகைகளும் இல்லாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, இதற்கு யார் தீர்வைப் பெற்றுக்கொடுப்பது. என நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தொழிலாளர் தேசிய முன்னணியின் பொதுச்செயலாளராக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அது தற்காலிக நியமனம் அல்ல. அப்பதவியில் அவரே நீடிப்பார். அதுமட்டுமல்ல உள்ளூராட்சி மன்றங்களிலும் நாம் பெண்களுக்கு இட ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளோம். உலகில் பல நாடுகளில் பெண்கள் உயர் பதவிகளை வகிக்கின்றனர். சில நாடுகளை பெண்கள் ஆள்கின்றனர். எமது பெண்களின் வாழ்வும் மேம்பட வேண்டும். அதற்காக நாம் குரல் கொடுப்போம்.

குறிப்பாக பெருந்தோட்ட பெண் தொழிலாளர்கள் சம்பளத்துக்காகக் கூட போராடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுத்துவிட்டோம் என சிலர் கொக்கரிக்கின்றனர். ஆனால் 12 அல்லது 15 நாள்கள்தான் வேலை வழங்கப்படும் எனவும், தொழிலாளர்களுக்கான சலுகைகள் இல்லாமல்போகும் எனவும் கம்பனிகள் கூறுகின்றன. இதனால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது? எமது மக்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் வேண்டும். எனவே, அவர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும் -என்றார். (ப)

# உதயவாசலில் நடைபெற்ற இரு கவிதை நூல்கள் வெளியீடு







யாழ்ப்பாணம், மார்ச் 16

'உதயவாசல்' அனுசரணையில் எங்கட புத்தகங்கள் ஏற்பாட்டில் இருநூல்களின் வெளியீட்டு விழா உதயன் வளாகத்தில் உள்ள உதய வாசல் மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

வேலணையூர் ரஜிந்தனின் 'கார்காலப் புலர்வுகள்', மற்றும் 'மணற்காடார்' ராராஜாஜி ராஜகோபாலனின் 'ஒரு சிறு புள்ளின் இறகு' ஆகிய கவிதைப் புத்தகங்கள் இதன் போது வெளியிடப்பட்டன.

கவிஞர் வேலணையூர் தாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உதயன் நிறுவனம் சார்பில் லக்ஷ்மி சரவவணபவன் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். கவிஞர் வடிவழகையனின் வாழத்துரையைத் தொடர்ந்து நூல்களின் வெளியீட்டை வேலணையூர் மக்கள் ஒன்றியம் ஏற்று நடத்தியது. முதல் பிரதிகளை சமூக திலகம் அ.கிருபாகரன் மற்றும் மருத்துவர் என்.கே.முருகானந்தன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். புத்தகங்களின் ஆய்வுரைகளை புலோலியூர் வே.நந்தகுமார் மற்றும் சிறீ சிறிஸ்கந்தராஜா ஆகியோர் நிகழ்த்தினர். மாதவி உமாசுதசர்மா கவிநய உரையை வழங்கினார். வேலணையூர் ரஜிந்தனின் ஏற்புரையைத் தொடர்ந்து எங்கட புத்தங்கள் சார்பில் கு.வசீகரனின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது. (ப)








# கொவிஷீல்ட் தடுப்பூசிக்கு இணையத்தில் முன்பதிவு

கொழும்பு, மார்ச் 16

கொழும்பு நகர எல்லைக்குள் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் கொவிஷீல்ட் தடுப்பூசியைப் பெற இணையத்தில் பதிவு செய்ய முடியும் என்று கொழும்பு மாநகர சபை அறிவித்துள்ளது. இதன்படி, www.colombo.mc.gov.lk என்ற கொழும்பு மாநகர சபை வலைத்தளத்தின் ஊடாக அல்லது e channelling.com அல்லது echanneling தொலைபேசி பயன்பாடு மூலம் முன்பதிவு செய்யலாம். இந்த சேவையைப் பெற எந்த இடைத்தரகரும் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# நாட்டில் வரும் 4 ஆண்டுகளில் 5 ஆயிரம் பாலங்கள் அமையும்

## இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 16

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் வழிகாட்டலின் கீழ் எதிர்வரும் 4 ஆண்டுகளுக்குள் 5ஆயிரம் கிராமப்புற பாலங்களை நிர்மாணிப்பதோடு, உட்கட்டமைப்பு வசதிகளும் கட்டியெழுப்பப்படும் என்று கிராமிய வதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம், கிராமப்புற மக்களுக்கு மருத்துவமனைகள், பள்ளிகள், பணியிடங்கள் மற்றும் சந்தைகளுக்கு எளிதில் பயணிக்க வாய்ப்பு கிடைக்கும். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு



கிராமத்தின் இடங்களைப் பார்வையிட இது ஒரு வாய்ப்பை வழங்குவதன் மூலம் சுற்றுலாத்துறையினருக்கும் உதவும். இந்த ஆண்டு நிறைவடைவதற்குள் ஆயிரம் பாலங்கள் நிர்மாணிப்பது அரசின் இலக்காகும். மேலும் இவ்வாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக 9.5 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். (ப)

# அசாத் சாலியை விசாரணை செய்ய தனிப்படையை அமைக்கிறது ரி.ஐ.டி



கொழும்பு, மார்ச் 16

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், முன்னாள் மேல் மாகாண ஆளுநருமான அசாத் சாலியை விசாரணை செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உதவி பொலிஸ் அத்தியட்சர் ஒருவரின் கீழ் ஐவர் கொண்ட தனிப்படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சி.ஐ.டி. பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரணசிங்கவின் மேற்பார்வையில், அதன் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிசாந்த டி சொய்ஸாவின் ஆலோசனைக்கு அமைய இந்த விசாரணைகளை குறித்த தனிப்படை முன்னெடுக்க வுள்ளது.

பொலிஸ் தலைமையகத்துக்கும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக் கடந்த இரு நாள்களில் கிடைக்கப் பெற்றுள்ள 5க்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை மையப்படுத்தி, விசாரணைகளுக்காக இந்த தனிப்படை அமைக்கப்பட்டது என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நாட்டின் பொதுச் சட்டத்துக்கு எதிராக அசாத் சாலி வெளியிட்டார் என்று கூறப்படும் கருத்துக்கள் நாட்டின் சட்டத்தை மீறுவனவாக அமைந்துள்ளதா, அந்த கருத்துக்கள் ஊடாக இனங்களுக்கு இடையே குழப்பத்தை ஏற்படுத்தும் வண்ணம் அசாத் சாலி செயற்பட்டுள்ளாரா? என இவ்விசாரணைகளில் ஆராயப்படவுள்ளது. அதன்படி அசாத்சாலியால், தெரிவிக்கப்பட்டது என்று கூறப்படும் கருத்துக்கள் அடங்கிய ஊடக சந்திப்பு, ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொலி, சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட அது தொடர்பிலான பதில்கள் மற்றும் அந்த ஊடக சந்திப்பு குறித்து கடந்த 13 ஆம் திகதி மீள விளக்கமளிக்கும் விதமாக அசாத் சாலி வெளியிட்ட கருத்துக்கள் என அனைத்து விடயங்களையும் இந்த தனிப்படை ஆராயவுள்ளது என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

எனினும் தனது வதிவிடம் அமைந்துள்ள பொலிஸ் அதிகாரி பிரிவான கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் அசாத் சாலி சென்றிருந்தார். இந்த நிலையில் அந்தப் பொலிஸ் நிலையத்தில் அசாத்சாலிக்கு எதிராக எந்த முறைப்பாடும் பதிவாகியிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# இலங்கையில் முதலீடு செய்ய சிறந்த முதலீட்டாளர்கள் தயார்;

## சாதனை என்கிறார் நாமல்

கொழும்பு, மார்ச் 16



இலங்கையில் முதலீடு செய்வதற்கு சிறந்த முதலீட்டாளர்கள் தயாராக இருப்பதை அவதானிக்கும்போது, அது பெரியதொரு சாதனையாகுமென விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

டுபாயின் ஷேக் சயீத் அறக்கட்டளை, இலங்கையிலுள்ள கிராமப்புற பாடசாலைகளுக்கு சுத்தமான குடிதண்ணீர் மற்றும் கழிப்பறைகளை வழங்கும் செயற்பாட்டுக்கு உதவுதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஷேக் சயீத் அறக்கட்டளையின் தலைவர் மற்றும் இயக்குநர் ஜெனரல் ஹமாத் சேலம் பின் கர்தூஸ் அல் அமேரி ஆகியோருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் விளைவாகவே இந்த உதவி கிடைக்கப் பெற்றுள்ளது.

மேலும் டுபாயிலுள்ள ஷேக்கின் குடும்பமும் இலங்கையின் திட்டங்களில் முதலீடு செய்ய ஒப்புக்கொண்டுள்ளது.

இவ்வாறு இலங்கைத் திட்டங்கள் மற்றும் தொழில்களில் முதலீடு செய்வதற்கு, இவர்கள் போன்ற சிறந்த முதலீட்டாளர்கள் தயாராக இருப்பதைப் பார்ப்பது எங்களுக்கு ஒரு பெரிய சாதனையாகும் என்றார். (ப)

# இராணுவத் தேவைக்காக கிழக்கில் காடு சுவீகரிப்பு

## எதிர்ப்பு நடவடிக்கையில் கூட்டமைப்பு எம்.பிக்கள்

**மட்டக்களப்பு, மார்ச் 16**

**மட்டக்களப்பு தாந்தாமலையில் இராணுவத்தினரின் தேவைகளுக்காக காடுகளைச் சுவீகரிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

பட்டிப்பளை-தாந்தாமலை பிரதேசத்திலுள்ள ஆயிரத்து 500 ஏக்கர் காடுகளையே இவ்வாறு கையகப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோ.கருணாகரம் ஆகியோர் இந்த சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். அதனைத் தொடர்ந்து நேற்று நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் காணி சுவீகரிப்பு நடவடிக்கையை கைவிட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இதனை இணைத்தலைவர் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனும் ஏற்றுக்கொண்டதுடன், பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானமும் எடுக்கப்பட்டது. என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)



# பாலத்துக்கான அடிக்கல் நடுகை

அம்பாறை, மார்ச் 16

"இதயங்களை இணைக்கின்ற கிராமத்தின் பாலம்" எனும் வேலைத்திட்டத்தின் கீழ் நிந்தவூர் அட்டபள்ளம் பிரதேசத்தில் பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் பாலத்துக்கான அடிக்கல்லை நாட்டினார்.

பிரதேச மக்களின் போக்குவரத்து, பொருளாதார அபிவிருத்தி மற்றும் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து என்பவற்றைக் கருத்திற்கொண்டு ஜேர்மன் பாடசாலைக்கு பின்னால் இந்தப் பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளது. (வ-இ)

# மட்டு. கடற்படையினர் ஐவருக்கு கொரோனா!

மட்டக்களப்பு, மார்ச் 16



மட்டக்களப்பு கல்லடி கடற்படை முகாமில் 5 கடற் படையினருக்கு, கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, தொற்றாளர்களின் எண்ணிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் 812 ஆக அதிகரித்துள்ளது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் கொரோனாத் தொற்றின் தாக்கம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பி.சி.ஆர்.பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், கல்லடி கடற்படை முகாமைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனாத் தொற்று நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்டது.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 812 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன், 731 பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். இதேவேளை, 73 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் -என்றார். (ற-இ)

# வாஸ் குணவர்தன, மனைவி வழக்கில் இருந்து விடுவிப்பு

கொழும்பு, மார்ச் 16

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன மற்றும் அவரது மனைவியை குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மஹரகமவில் சட்டவிரோதமாக ஒரு நிலத்தை கையகப்படுத்தியமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்தே அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ப)

# கிழக்கு நீர் அபிவிருத்தித் திட்டத்தின் குழாய்கள் இறக்குமதியில் மோசடி

## கண்டறிந்தது அரச கணக்குகள் குழு

கொழும்பு, மார்ச் 16

ஜெய்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் 2013 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட கிழக்கு மாகாண நீர் அபிவிருத்தித் திட்டத்துக்காக டிஐ குழாய்கள் மற்றும் துணைக் கருவிகளை இறக்குமதி செய்யும் போது இடம்பெற்ற மோசடி காரணமாக 62 லட்சத்து 499 ஆயிரத்து 656 ரூபாவை அரசாங்கம் மேலதிகமாகச் செலுத்தவேண்டி ஏற்பட்டது என்று அண்மையில் நடைபெற்ற அரச கணக்குகள் குழுவில் கண்டறியப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்குத் தேவையான டிஐ குழாய்கள் மற்றும் துணைக் கருவிகளை இறக்குமதி செய்யும் பொறுப்பு திறைசேரியால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்கப்பட்டதுடன், இதற்கான ஒப்பந்தத்தை அக்சஸ் இன்டர்நஷனல் தனியார் நிறுவனத்துக்கு சபை வழங்கியிருந்தது.

இந்தப் பொருள்களுக்கு வரியைச் செலுத்தாது களஞ்சியக் கிடங்கில் வைப்பதற்கு சுங்கத் திணைக்களம் அனுமதி வழங்கியிருந்ததுடன், இதற்காக 8 சுங்கப் பிரகடனங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி 51 லட்சத்து 39 ஆயிரத்து 62 அமெரிக்க டொலராக இருந்த போதும், அவற்றை களஞ்சியத்திலிருந்து விடுவிக்கும்போது தேசிய ரீதியில் தயாரிக்கப்பட்ட பற்றுச்சீட்டில் மொத்தப் பெறுமதி 6 லட்சத்து 350 ஆயிரத்து 364 அமெரிக்க டொலர் என போலியான தகவல்கள் குறிப்பிடப்பட்டு விடுவிக்கப்பட்டதால் குறிப்பிட்ட தனியார் நிறுவனம் ஒரு லட்சத்து 207ஆயிரத்து 98 டொலர் இலாபத்தைப் பெறுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுத்தது தொடர்பில் அரச கணக்குகள் குழு கவனம் செலுத்தியுள்ளது. (ப)



# மைதானம் திறப்பு

திருகோணமலை, மார்ச் 16

மாங்காயூற்று பகுதியில் உள்ள பாவநாசபுரம், தச்சனாபுரம் மற்றும் கைலாசபுரம் ஆகிய கிராமங்களுக்கான பொது மைதானம் அப்பகுதி இளைஞர்களிடம் உத்தியோகபூர்வமாக கடந்த சனிக்கிழமை கையளிக்கப்பட்டது.

இதன்போது மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ய)

# 'ரியுடா அப்சோலுடா'

■ திருமதி அ.சிறிரங்கன், நா.நிரஞ்சன்குமார்
■ துறைசார் அதிகாரிகள்

## தக்காளிகளை விரைவாய் வேட்டையாடும் அந்திலிருந்து அவற்றை பாதுகாப்போம்!

யாழ், மாவட்டத்தில் தெல்லிப்பழை, பன்னாலை, அளவெட்டி, அச்சுவேலி, மற்றும் கோப்பாய் ஆகிய பிரதேசங்களில் தக்காளிச் செய்கையில் ஆக்கிரமிப்புப் பீடையான இலை மற்றும் காய் சுரங்க மறுப்பியின் தாக்கத்தை அதிகளவில் அவதானிக்க முடிகிறது.

இந்தப் பீடைநோயானது இலத்தீன், அமெரிக்கா, ஐரோப்பியா, மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் இருந்து ஏனைய நாடுகளுக்குப் பரவலடைந்துள்ளது. இதன் விஞ்ஞானப் பெயர் ரியுடா அப்சோலுடா ஆகும். இது லிபரோப்டரா வர்ணத்ததைச் சார்ந்த அந்துப் பூச்சி ஆகும்.

### ரியுடா அப்சோலுடா அந்தின் வாழ்க்கை

இந்த அந்துப் பூச்சி இரவில் சுறுசுறுப்பாக நடமாடும். அதேநேரம் பகல் வேளைகளில் இலைகளுக்கு இடையில் மறைந்து காணப்படும். இதன் வாழ்க்கை வட்டத்தில் முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, நிறையுடலி என்னும் 4 வளர்ச்சிப் பருவங்களை கொண்டது. இதனுடைய வாழ்க்கை வட்டம் 3035 நாள்கள். எனவே ஒரு வருடத்தில் 1012 சந்ததிகளை உருவாக்கும்.

வாழ்க்கைக் காலத்தில் ஒருபெண் அந்துப் பூச்சி 250-260 முட்டைகளை இலையின் கீழ்ப் பரப்பிலும், தண்டுப் பகுதியிலும் இடும். இந்த முட்டைகள் சிறிய 0.35 மில்லி மீற்றர் அளவுடைய மஞ்சள் வெள்ளை நிறமுடையவை. 46 நாள்களில் முட்டை பொரிக்கும். குடம்பியின் தலை கடுமையான நிறமாகவும், துண்டம் பச்சையிலிருந்து இளம் ரோஸ் நிறத்திலும் காணப்படும். முதலாவது துண்டப் பகுதியில் அவதானிக்கக் கூடியவாறான கடும் நிறத்திலான வளையம் காணப்படும். வெற்றுக் கண்ணினால் அவதானிப்பது கடினம்.

கூட்டுப்புழு இளம் கபிலம் நிறத்திலும் காணப்படும். 6 மில்லிமீற்றர் நீளமானது. 12-15 நாள்களில் குடம்பியானது கூட்டுப்புழுவாக மாற்றமடையும். கூட்டுப்புழு மண்ணில் அல்லது இலையின் சுருண்ட பகுதியில் அல்லது இலையின் சுரங்கத்தில் காணப்படும். குடம்பியானது நிறையுடலியாக மாறும் செயற்பாடானது கால




நிலையில் தங்கியிருக்கும்.

நிறையுடலி 6 மில்லிமீற்றர் நீளமுடையது. விரிந்த நிலையில் 10 மில்லிமீற்றர் நீளமுடையதாகவும் காணப்படும். வெள்ளி கலந்த கபில நிறமானதும் கறுப்பு நிறப் புள்ளிகளையுடையதும், பளபளக்கும் தன்மையுடைதுமாகும்.


### ரியுடா அப்சோலுடா அந்தின் தாக்கம்

தக்காளிக் குடும்பத்தின் அனைத்துப் பகுதியையும் தாக்கக்கூடியது. குடம்பிப் புழுக்களின் எல்லா நிலைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இலைகளின் மேற்பரப்பை சுரண்டி சுரங்கம் ஆக்கி உட்பகுதியில் உள்ள இழையங்களை உண்ணும். இதனால் இலையின் மேற்பரப்பில் ஒழுங்கற்ற வெள்ளைநிறக் கோடுகள் காணப்படும்.

இவை ஒருங்கிணைந்து இலைகள் கருகிய தோற்றத்தில் சுருண்டு காணப்படும். அத்துடன் காய்கள், பழங்களும் பாதிக்கப்படும். பழங்களில் சிறுகோடு மற்றும் சிறுபுள்ளி போன்ற அடையாளங்கள் காணப்படும். இந்தப் புழுவானது பழங்களின் மேற்புறத் தோலில் உட்புறமாகக் காணப்படும். இதனது இரண்டாம் நிலைத் தாக்கமாக பங்கஸால் பழங்கள் அழுகிக் காணப்படும். இதன் காரணமாக தக்காளிப் பழத்தின் தரத்திலும் விளைச் சலிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

### அந்தின் தாக்கத்தை முகாமை செய்தல்

ரியுற்றா அப்லுட்டா இலைச் சுரங்க மறுப்பியை கட்டுப்ப



டுத்தல் மிகவும் சவாலான விடயமாகும். இந்த அந்தினை இராசயனங்களைப் பயன்படுத்தி வினைத்திறனாகக் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் விரைவாக தனது புதிய சந்ததியினைப் பெருக்குவதனால் இரசாயனங்களுக்கு எதிர்ப்பான குல வகைகள் உருவாகின்றன. எனவே ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் ஊடாகவே இதனைக் கட்டுப்படுத்த முடியும்.

### வயற் சுகாதாரத்தைப் பேணல்

- பாதிப்படைந்த தாவரப் பகுதிகளை அகற்றி எரித்தல்.
- அறுவடை முடிந்த பயிர்களை உடனடியாகப் பிடுங்கி அகற்றல்.
- வெள்ளை நிறமான ஒளிப்பொறி பயன்படுத்தல் வெள்ளை ஒளி ஒளிரக்கூடிய மின் விளக்குகளை வயல்களில் ஆங்காங்கே தொட்டம் தொட்டமாக வைத்தலும் அவற்றின் அடிப்பகுதியில் நீர்கொண்ட அல்லது கிறீஸ் பூசிய அகன்ற வாயுள்ள பாத்திரத்தை வைத்தலும்.
- அந்தைக் கவரும் இனக்கவர்ச்சிப் பொறியைப்பயன்படுத்தல்
- வேப்பெண்ணெயை பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு விசிறுதல்.
- ஒரே குடும்பத் தாவரங்களான கத்தரி, தக்காளி, மிளகாய், உருளை போன்றவற்றை தொடர்ந்து பயிரிடுதலை தவிர்த்து தானியப் பயிர்களை சுழற்சி முறையில் மேற்கொள்ளல்.

இது தொடர்பான மேலதிகமான தாக்கத்தை அவதானிக்கும் போது விவசாய போதனாசிரியர்களுடன் அல்லது துறைசார் திணைக்களங்களுடன் தொடர்புகொள்ளும் போது உரிய தீர்வையும் தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

---

## கிளி. பொன்நகரில் பாதுகாப்பற்ற வீதியால் மக்கள் அசௌகரியம்

கிளிநொச்சி, மார்ச் 16

கரைச்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிளி.சிவபாத கலையகம் ஆரம்ப தமிழ்க் கலவன் பாடசாலையின் பிரதான வீதி ஏ - 9 வீதியிலிருந்து புகையிரத பாதையை ஊடறுத்துச் செல்கிறது. இதுவரை இந்தப் பாதை புனரமைக்கப்படாமையால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது எனப் பொன்நகர் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தரம் ஒன்று தொடக்கம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரை உள்ள இந்தப் பாடசாலையில் சுமார் 475 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

பாதுகாப்பற்ற புகையிரதப் பாதையைக் கடந்தே ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலை செல்ல வேண்டியநிலை உள்ளது.

இந்த வீதியில் இலங்கை மத்திய வங்கியின் அலுவலகம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் கால்நடைகள் பயிற்சிக் கல்லூரி போன்ற பல அரச நிறுவனங்கள் உள்ளன. வீதி சீர்செய்யப்படாமையால் சுமார் 250 மீற்றர் தூரம் செல்லவேண்டிய ஏ-9 வீதியை தற்போது அறுநூறு மீற்றர் தூரம் சுற்றிக் கடந்தே திணைக்கள வாகனங்கள் பயணிக்கின்றன.

இவற்றைக் கருத்திற்கொண்டு இந்த வீதியை புனரமைத்து, பாதுகாப்பு கடவையை ஏற்படுத்தித் தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-12)

---



## சுகாதார விதிமுறை மீறிய வியாபாரிக்கு ரூ. 7500 தண்டம்

சங்கானை, மார்ச் 16

சுகாதார விதிமுறைகளை மீறி கடல் உணவுகளை விற்பனை செய்து வந்த வியாபாரி ஒருவருக்கு மல்லாகம் நீதிமன்றத்தால் 7ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சங்கானை பொதுச் சந்தையில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் கடல் உணவுகளை விற்பனை செய்த கடலுணவு வியாபாரிகள் ஐவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

குறித்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதிமன்றத்தில். மீன் வியாபாரி ஒருவர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து அவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காத ஏனையவர்களின் வழக்கு விசாரணைகள் மேமாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ-115)

# ஆவண மாற்றங்கள் அமைச்சின் முடிவு!

## யாழ். மாவட்டச் செயலர் கைவிரிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 16**

**காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிப் பத்திரங்கள் அநுராத புரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டமை அவ் ஆணைக்குழு மற்றும் அமைச்சின் முடிவே தவிர எனது முடிவல்ல என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**

யாழ்.மாவட்டச் செயலகத்தில் இருந்து காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வட மாகாண காணி கோப்புகள் அநுராதபுரத் துக்கு எடுத்துச் செல்லப்பட்டமை தொடர்பில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளிக் கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. 2008ஆம் ஆண்டுக்கு முன் னர் வடக்கு மாகாணத்தின் காணி சீர்திருத்த ஆணைக்கு ழுவின் காணிகள் தொடர்பான கோப்புகள் அனைத்தும் அநுரா தபுரத்திலேயே இருந்தன.

பின்னர் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அதற்கான ஒரு தனி இடம் ஒதுக்கப்பட்டு அதன் நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தும் ஆணைக்குழு வின் உதவிப் பணிப்பாளர் தலைமையில் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

வட மாகாண காணி சீர்திருத்த அலுவலகம் யாழ். மாவட்டச் செயலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அலுவலகம் அல்ல அதன் நிர்வாக நடவடிக்கை கள் அனைத்தும் அதற்கான பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மேற்பார்வையில் இடம்பெற்று வந்தன.

ஆகவே ஆவணங்களை அநு ராதபுரத்துக்கு கொண்டு செல் வதா? இல்லையா ?என்ற முடி வைக் கூட அவர்களே தான் எடுத்திருந்தார்கள் - என்றார். (ஐ-159, 20)



## குறுக்கே ஓடிய நாயால் விபத்துக்குள்ளானது பஸ்

### எவருக்கும் காயமில்லை

மன்னார், மார்ச் 16

மன்னாரிலிருந்து ஆடைத்தொழிற்சாலைக்கு பணிக்கு செல்லும் பெண்களை ஏற்றிச்சென்ற பஸ் மடு பொலிஸ் நிலையம் முன்பாக நேற்றுக் காலை விபத்துக்குள்ளானது.

மன்னாரில் இருந்து மடுவை நோக்கி பஸ் சென்று கொண்டிருக்கும் போது, மடு பொலிஸ் நிலையத் துக்கு முன்பாக நாய் ஒன்று குறுக்கிட்டதை அடுத்து வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ் பள்ளத்துக்குள் சென்று குடைசாய்ந்தது.

இந்த விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன் இந்த விபத்துத் தொடர்பான விசார ணைகளை மடு பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றமை - குறிப்பிடத்தக்கது. (ற-இ)

### முதலாம் பக்கத் தொடர்ச்சிகள் ...

#### யாழ்.பெண்.....

என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள் ளது. கொரோனாத் தொற்றால் நாட்டில் இதுவரை உயி ரிழந்தவர்களின் எண்ணிக்கை 532 ஆக உயர்ந் துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 86 வயதான பெண் ஒருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த சனிக்கிழமை உயிரிழந் துள்ளார்.

கம்பஹா பகுதியைச் சேர்ந்த 76 வயதான பெண் ஒரு வர், கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

கொழும்பு, கொச்சிக்கடைப் பகுதியைச் சேர்ந்த 61 வய தான ஆண் ஒருவர், கொழும்பு வடக்கு வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 8ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

பமுனுகம பகுதியைச் சேர்ந்த 78 வயதான ஆண் ஒரு வர், அவரது வீட்டில் கடந்த 10ஆம் திகதி உயிரிழந்துள் ளார். களுத்துறைப் பகுதியைச் சேர்ந்த 94 வயதான பெண் ஒருவர், ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். (எ-22)

#### கத்திக்குத்தில்....

தாக்குதல் நடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதேநேரம் கத்திக்குத்து நடத்தியவரின் வீட்டுக்கு நேற் றுத் தீ வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10 மணியளவில் சந்தேகநபர்களின் வீட்டில் இருந்து சில பொருள்களை எடுத்துச் செல்வதற் காக உறவினர்கள் பொலிஸாரின் பாதுகாப்புடன் சென் றிருந்தனர். கத்திக்குத்துக்கு இலக்காகியவரின் மனைவி மற்றும் சகோதரிகளும், கிராம மக்களும் அந்தச் சந் தர்ப்பத்தில் அங்கு ஒன்று சேர்ந்தனர்.

இந்த விடயத்தில் பொலிஸார் போதுமான நடவடிக்கை களை முன்னெடுக்கவில்லை என்று தெரிவித்து அவர் கள் பொலிஸாருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகநபரின் வீட்டின் மீது இனந்தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் தீயைக் கட்டுப்பாட் டுக்குள் கொண்டுவந்தனர்.

அதேவேளை, பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்கான வர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி நடந்த சம்பவத்தில் வட்டக்கச்சி, கட்சன் வீதியைச் சேர்ந்த அருளம்பலம் துஷ்யந்தன் (வயது39) என்பவர் உயிரிழந்தார்.

அந்தப் பகுதியில் வசிக்கும் பதின்ம வயது மாணவி ஒரு வர் பரீட்சைக்குச் சென்று வரும்போது இளைஞர் ஒருவர், பின்தொடர்ந்து சென்று தொல்லை கொடுத்தார் என்றும், கடந்த 10 ஆம் திகதி அந்த மாணவி, தனது இளைய சகோதரனான சிறுவன் ஒருவனுடன் சென்றபோது, அந்த இளைஞர் சிறுவனைத் தாக்கினார் என்றும் கூறப் படுகின்றது. அதைக் கண்ட துசியந்தன் அந்த இளை ஞனை எச்சரித்துள்ளார்.

இந்தநிலையில் அன்றையதினம் இரவு துசியந்தனின் வீட்டுக்குள் புகுந்த அந்த இளைஞர், சரமாரியாக அவ ரைக் கத்தியால் குத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். அதில் படுகாயமடைந்த துசியந்தன் உடனடியாக கிளி நொச்சி பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி மறுநாள் அதி காலை அவர் உயிரிழந்தார். தாக்குதல் நடத்தினார் என்று கூறப்படும் 18 வயது இளைஞனும் மறுநாள் இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந் தார். (எ-12)

#### அம்பிகையின்...

செல்வகுமார் மேற்கொண்ட உணவு தவிர்ப்புப் போராட் டம் நேற்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. பல தரப்பி னரின் கோரிக்கைகளை ஏற்று இந்தப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை மீது அனைத்துலக சுயாதீன விசாரணைப் பொறிமுறையை உருவாக்குதல், இலங்கையை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரித்தல், இலங்கைக்கான தனியான அறிக்கையாளரை நியமித் தல் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புக்காக ஐ.நா. பரிந்துரைத்தல் ஆகிய நான்கு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 17 தினங்களாக அம்பிகை செல்வகுமார் உணவு தவிர்ப் புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கைகளில் சில அம்சங்கள், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான அறிக்கையில் காணப்படுவதை அடுத்து, அம்பிகை செல்வகுமாரின் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதேவேளை, அம்பிகை செல்வகுமாருக்கு ஆதரவாக, கென்டன் பிரதேசத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக் கும், பிரிட்டன் பொலிஸாருக்கும் இடையே நேற்று முரண்பாடுகள் ஏற்பட்டன. போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டார் என்று அந்த நாட்டுத் தகவல்கள் தெரி வித்தன. (எ-இ)

#### யாழ்.நகரில்...

துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.


மன்னாரைச் சேர்ந்த 6 பேருக்கும், யாழ்ப்பாணம் நகர் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குமே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், 5 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று அறிகுறி காணப்பட்டதை அடுத்து, அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 65 வயதான அவ ருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட் டுள்ளது.

தொற்றாளருடன் தொடர்பைப் பேணியோரை இனங்கா ணும் நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் ஆரம்பிக் கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

மன்னாரில் இனங்காணப்பட்ட 6 பேரில், ஐவர் மன்னார் மீன் சந்தையில் தொற்றுடன் இனங்காணப்பட்டவர்களு டன் தொடர்புகளைப் பேணியவர்கள் என்று தெரிவிக்கப் பட்டது. ஒருவர் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## சிவநகர் இளைஞர் கழகத்தால் குருதிக்கொடை முகாம்



முல்லைத்தீவு, மார்ச் 16

முல்லைத் தீவு மாவட்டத்தின் புதுக் குடியிருப்பு பிரதேசத்தில் நேற்றுமுன்தி னம் சிவநகர் இளைஞர் கழ கத்தால் முன் னெடுக்கப்பட்ட குருதிக்கொடை முகாமில் 37 பேர் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கியுள்ளனர்.

சிவநகர் இளைஞர் கழகத் தலைவர் சுஜிவன் தலை மையில் இந்தக் குருதிக்கொடை முகாம் இடம்பெற்றது.

இந்த முகாமில், புதுக்குடியிருப்பு இளைஞர் நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிவறஞ்சன், புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அ.விஜிதரன், முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர், புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் கழக சம்மேளன முன்னாள் தலைவர், முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக விளையாட்டுச் செயலாளர் மு. நிஷாக் மற்றும் சிவநகர் இளைஞர் கழக உறுப்பினர்கள், யங் ஸ்ரார் இளைஞர் கழக உறுப்பினர்கள், திம்பிலி இளை ஞர் கழக உறுப்பினர்கள், சென் அன்ரனிஸ் இளை ஞர் கழக உறுப்பினர்கள், வண்ணன் இளைஞர் கழக உறுப்பினர்கள் மற்றும் பாரதிதாசன் இளைஞர் கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-19)

# தற்கால கல்வித்திட்டத்தால் வேலை வாய்ப்புகள் வராது!

## கல்வி அமைச்சர் ஒப்புதல்



**கொழும்பு, மார்ச் 16**

**'இலவச கல்வித் துறையில் தற்போது நடைமுறையில் உள்ள பாடத்திட்டத்தில் உள்ளடக்கியுள்ள விடயங்கள் பொருளாதார முன்னேற்றத்துக்கும், தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கும் ஏற்புடையதல்ல' என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கை ஊடாக நவீன உலகுக்கு பொருந்தும் வகையில் பாடத்திட்டத்தை மாற்றியமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலவச கல்வியைக் கற்கும் மாணவர்கள் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதில் பெரியளவில் போராட்டம் நிலவுகிறது.

பல்கலைக்கழகத்தில் இருந்து மாணவர்கள் வெளியேறிய பின்னர் அனைத்து பட்டதாரிகளுக்கும் அரச தொழிற்துறையைப் பெற்றுக் கொடுப்பதில் பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு சிக்கல் நிலை காணப்படுகிறது.

தற்போது அமுலில் உள்ள பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கும், தொழில் வாய்ப்புகளை இலகுவில் பெற்றுக்கொள்வதற்கும் சாதகமாக அமையவில்லை. மாறாக சிக்கல் தன்மையை மாத்திரமே ஏற்படுத்தியுள்ளன.

புதிய கல்வி மறுசீரமைப்பின் ஊடாக தகவல், கணனி மற்றும் ஆங்கிலம் ஆகிய கற்கை நெறிகளை பிரதான பாடத்திட்டங்களாக உள்வாங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதிய கல்வி மறுசீரமைப்பு திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 26ஆம் திகதி அலரி மாளிகையில் பிரதமர் தலைமையில் இடம் பெறவுள்ளது - என்றார். (ஐ-இ)


# இலங்கை திரும்புவோர் தொடர்பில் இறுதி முடிவு

கொழும்பு, மார்ச் 16

**வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதனடிப்படையில், தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்குவதற்கான காலத்தை ஏழு நாள்களாக குறைப்பது தொடர்பிலேயே இறுதி முடிவு எடுக்கப்படும் என்று கொவிட் -19 பரவலைத் தடுக்கும் தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள் ஹொட்டல்களில் தனிமைப்படுத்தலுக்குள்ளாகும் போது எதிர்கொள்ளும் பல்வேறு சிரமங்களைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)



# பாடசாலை கண்ணாடிகள் விசமிகளால் உடைப்பு!

வவுனியா, மார்ச் 16

**வவுனியாவில் மூன்றுமுறிப்பு பகுதியில் அமைந்துள்ள அ.த.க பாடசாலையின் யன்னல் கண்ணாடிகள் விசமிகளால் உடைத்து நொருக்கப்பட்டுள்ளன.**

முதலாம் தவணைக்கான விடுமுறை முடிவடைந்து நேற்றைய தினம் இரண்டாம் தவணை கல்விச்செயற்பாடுகளுக்காக பாடசாலை ஆரம்பித்திருந்தது. இதன்போது பாடசாலைக் கட்டட யன்னல் கண்ணாடிகள் உடைத்து சேதமாக்கப்பட்டிருந்தமையுடன், பாடசாலை வளாகத்தில் மதுப்போத்தல்களும் வீசப்பட்டிருந்தன.

இதனையடுத்து பாடசாலை நிர்வாகத்தால் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ-110)

# பாடசாலைகளை மேம்படுத்தும் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 16

**தேசிய பாடசாலைகளை மேம்படுத்தும் வேலைத்திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

இதன் முதற்கட்டத்தின் கீழ் 123 தேசிய பாடசாலைகளும் இரண்டாம் கட்டமாக 673 தேசிய பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மாத்தறை - ராகுல கல்லூரியிலும், மாத்தறை மஹிந்த ராஜபக்ச கல்லூரியிலும் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கட்டடங்களை பார்வையிடுவதற்காகச் சென்றிருந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த வேலைத்திட்டத்துக்கான பாடசாலைகளை நிர்ணயிக்கும் பொறுப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி மட்ட அமைப்பின், வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கூட்டத்துக்கு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலர் மற்றும் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(ற-9)

### பெற்றோரின் வேண்டுகோளுக்கமைய

# கோணாவில் கிராமத்தில் தனியார் கல்வி நிலையம்

கிளிநொச்சி, மார்ச் 16

**கனடா ஈகை அமைப்பின் நிதி அனுசரணையில் மாலை நேரக் கல்வி நிலையம் ஒன்று கோணாவில் கிராமத்தில் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்பட்டது.**

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக சனத்தொகையைக் கொண்ட இரண்டாவது பெரிய கிராம அலுவலர் பிரிவாகவுள்ள கோணாவில் கிராமத்தில் உயர்தர கலை, வர்த்தகப் பிரிவுகளைக் கொண்ட ஒரு பாடசாலையும், இரண்டு ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளும் இயங்கி வருகின்றன. அத்தோடு அருகில் உள்ள ஊற்றுப்புலம் கிராமத்தில் தரம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையும் இயங்கி வருகிறது.

எனவே இவ்விரு கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாடசாலைக் கற்றல் நேரத்துக்கு பின்னர் தங்களது நேரங்களை பயனற்ற விதத்தில் கழித்து வருகின்றனர்.

இதனால் பல மாணவர்கள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த மாணவர்களின் பெறுபேறுகளில் வீழ்ச்சி காணப்படுகின்றது என்று கவலை தெரிவித்த பெற்றோர்கள் மற்றும் கிராம நலன் விரும்பிகள், தங்களது கிராமத்தில் மாலை நேரக் கல்வி நிலையம் ஒன்றை ஆரம்பிக்குமாறு கோரியிருந்தனர்.

இதற்கமைவாக மேற்படி கல்வி நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

ஆரம்பித்த சில நாள்களில் 170 க்கும் மேற்பட்ட மாணவர்கள் இணைந்துள்ள அதேவேளை, நாளுக்கு நாள் புதிதாக மாணவர்கள் இணைந்தும் வருகின்றனர். (ற- 222)



கண்டு அறக்கொடை நிதியத்தின் ஊடாக, அவரது நண்பர்களால், முழங்காவில் மகா வித்தியாலய மாணவர்களுக்கு அண்மையில் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது. அத்துடன் பல்கலை மாணவி ஒருவருக்கு உதவித்தொகையும் வழங்கப்பட்டது. அமரர் நேசதுரை நிலக்சனின் ஞாபகார்த்தமாக அவரது நண்பர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நிதியத்தின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ந)

# முதியவரின் சடலம் இனங்காணப்பட்டது

சாவகச்சேரி, மார்ச் 16

**கைதடிப் பகுதியில் பற்றைக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டவர் கைதடி குமரநகரைச் சேர்ந்த சரவணை முருகேசு (வயது - 65) என இனங்காணப்பட்டுள்ளது. தனியாக வசித்து வந்த அவர் சில நாள்களுக்கு முன்னர் காணமல் போயிருந்தார்.** இந்நிலையில் அண்மையில் அவரது வீட்டிலிருந்து இருநூறு மீற்றர் தூரத்திலுள்ள காணியொன்றிலுள்ள கிடங்கில் இருந்து சடலமொன்று உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டது. சடலம் அவரது உறவினர்களால் இனங்காட்டப்பட்டதையடுத்து, விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (வ-9,288)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்புச்சொற்பொழிவு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் மாலை 5.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த சிறப்புச் சொற்பொழிவானது "மாங்கனியும் பரம்பொருளும்" எனும் தலைப்பில் இளம்சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் ச.நவநீதனால் நிகழ்த்தப்படவுள்ளது. இந்தச் சொற்பொழிவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற-இ)

## ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லப் பணியாளர் வெற்றிடங்கள்-2021

**1. முழுநேர சமையலாளர்:-**
**தகைமைகள்**
1. 35 வயதிற்கும் 55வயதிற்கும் இடைப்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கலாம்.
2. தங்கியிருந்து சமையல் வேலை செய்தல் வேண்டும்.
3. குடும்பப் பொறுப்பு இல்லாதவர்களாக இருத்தல் வேண்டும்.
4. நல்ல சமையல் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
5. தங்குமிட வசதி, உணவு என்பன இலவசமாக வழங்கப்படும்.
6. ஆரம்ப மாதச் சம்பளம் ரூபா 24000/= வழங்கப்படும்
7. கிராமசேவகரின் நற்சான்றுப் பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**2. சிறுமிகள் பெண் மேற்பார்வையாளர்:-**
1. 35 வயதிற்கும் 55 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. கல்வித் தகைமை - க.பொ.த(சா/த) இல் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம் மற்றும் தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களிற்கு குறையாமல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஒரே தடவையில் 05 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
3. பிள்ளைகளுடன் தங்கியிருந்து பணிபுரிதல் வேண்டும்.
4. கிராமசேவகரின் நற்சான்றுப் பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
6. ஆரம்ப மாதச் சம்பளம் 21500/= வழங்கப்படும்.
7. தங்குமிட வசதி. உணவு என்பன இலவசமாக வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 27.03.2021**
**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :**
**ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்,**
**வதிரி, கரவெட்டி**
தொலைபேசி இலக்கங்கள்- 0212263136,
0212265069, 0775147045

**அ.சிவசுவாமி,**
**தலைவர்**

# ஈஸ்டர் தாக்குதல் விவகாரம் ஏப்ரல் 21க்கு முன் நீதி கிடைக்குமாம்!

*பீரிஸ் நம்பிக்கை*

கொழும்பு, மார்ச் 16
ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய எவரையும் அரசு பாதுகாக்காது. தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு (ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்ட தினம்) முன்னர் சாத கமான பெறுபேறுகள் கிடைக்கப் பெறும் என்று அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசின் கடப்பாடாகும். எனவே, அவ்வறிக்கையிலுள்ள முக்கிய விடயங்கள் நிச்சயம் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளார். காலக்கெடுவும் விதிக்கப்பட்டுள்ளது.
ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை உட்பட அனைத்து இணைப்புகளும் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. எம்மிடம் ஒளிப்பதற்கு ஒன்றும் இல்லை. எனினும், தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயங்கள் வெளிப்படுத்தப்படமாட்டாது என்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் உள்ளது' - என்றார். (ம-44)

## கண்ணீர் அஞ்சலி



ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும். வலிகிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும், யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபையின் முன்னாள் பணிப்பாளருமாகிய

### நாகலிங்கம் சுந்தரலிங்கம்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்
*ஓம் சாந்தி !!!*

**இல.12,கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தலைவர், பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள், கூட்டுறவாளர்கள்,**
**யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச்சபை.**

## கார்கள்/வான்கள் வாடகைக்குத் தேவை

கார்கள் /வான்கள் மாதாந்த அல்லது வருட குத்தகைக்கு சாரதி அல்லாமல் வாடகைக்கு தேவை.
075 090 6486

## பெண் ஊழியர்கள் தேவை

மென்பான உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு உற்பத்திப் பகுதியில் வேலை செய்வதற்கு பெண் ஊழியர்கள் (வயது 20 தொடக்கம் 45 வரை) தேவை.
**தொடர்புகளுக்கு:**
**021 221 3788, 077 583 3045**

## தவறவிடப்பட்டுள்ளன

உரும்பிராய் இந்துக்கல்லூரியில் இருந்து உரும்பிராய் வேதக்கோயிலடிக்கு இடைப்பட்ட பகுதியில் தேசிய அடையாள அட்டை (535974560 V) சாரதி அடையாள அட்டை மற்றும் அதனுடன் இணைந்த ஆவணங்கள் என்பன சிறுகைப்பையுடன் தவறவிட்டப்பட்டுள்ளன. இதைக் கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
**தொடர்பு: 021 223 0715**

## பெயர் மாற்றம்

நுணாவில் மத்தி. கத்தாப்படி வீதி. சாவகச்சேரியைச் சேர்ந்த **சின்னத்துரை வசுமதி** ஆகிய நான் எனது பெயரை **சின்னத்துரை அன்பழகு** என மாற்றம் செய்து இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தரு கின்றேன்.
**சின்னத்துரை அன்பழகு**

## வீடு வாடகைக்கு தேவை

சாவகச்சேரி நகரை அண்டிய பகுதியில் பிரதான வீதியை அண்மித்து குறைந்த வாடகை, முற்பணத்திற்கு வீடு வாடகைக்கு தேவை.
**077 9581 741**

## சுன்னாகம் அபான்ஸ் நிறுவனத்தில் உடனடி வேலைவாய்ப்பு

**விற்பனை பிரதிநிதி**
ஆண்கள் - 02
வயது - (19 - 25)
கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும்.
சுயவிபரக்கோவையுடன் நேரில் சமுகமளிக்கவும்
தொடர்புகளுக்கு:
**077 220 8242** முகாமையாளர்

## கேள்வி அறிவித்தல்
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் - 2021
## வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை

01. தலைவர், பெறுகைக்குழு, வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. இருப்பினும் வடமாகாணத்தின் நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.
03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் 18.02.2021 ஆம் திகதிய பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016 (III) இற்கமைவாக அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்பிற்கான சீடா (CIDA) பதிவுள்ளவராகவும், கறுப்புப் பட்டியலில் (Black List) பெயர் இடம்பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர்/செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, செட்டிகுளம் (தொலைபேசி 024-2260914/024-2260055, தொலைநகல் 024-2260913, மின்னஞ்சல்-techvckps@gmail.com/cheddips@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 16/03/2021 ஆம் திகதியிலிருந்து வேலைநாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் **பகுதி** 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை** (Schedule) **பகுதி** 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர்/செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, செட்டிகுளம் எனும் இடத்திலிருந்து 16/03/2021 ஆம் திகதியிலிருந்து 30/03/2021 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் பி.ப 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/= (VAT நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
07. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர்/செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, செட்டிகுளம் எனும் முகவரிக்கு 30/03/2021 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் இட வேண்டும். கேள்வி மனுப்பத்திரத்துடன் சீடா (CIDA) புத்தகத்தின் ஒப்பந்தகாரரின் விபரம் மற்றும் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்த வேலைகளின் விபரம் அடங்கிய பக்கங்களின் பிரதி இணைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றம் செய்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியிலிருந்து 63 நாட்கள் வரையும் (01/06/2021) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூபா மில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | NP/14/43(6) /5/3-4(01) /2021 | வீரபுரம் - சின்னத்தம்பனை வீதி கல்லிட்டுத் தாரிடல் | 4.59 | 90 நாட்கள் | C8/C7-வீதி | 46,000.00 | 29/06/2021 |

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 23/03/2021 பி.ப 2.30 க்கு வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபையில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை.**
**16.03.2021**

## மோ.சைக்கிள் மீது குரங்கு பாய்ந்ததில் இருவர் காயம்!

சாவகச்சேரி, மார்ச் 16

மோட்டார் சைக்கிள் மீது குரங்கு பாய்ந்ததில், அதில் பயணித்த தாயும் மகனும் காயமடைந்துள்ளனர். சாவகச்சேரி மீசாலை ஏ-9 வீதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த அரச அலுவலர் ஒருவர் தனது மகனைப் பாடசாலைக்கு ஏற்றிவந்த போது, வேலியில் மறைந்திருந்த குரங்கு, மோட்டார் சைக்கிள்மீது பாய்ந்ததில் அவர்கள் வீழ்ந்து காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (ற-9)


## 125 கட்டாக்காலி மாடுகள் 4 மணிநேரத்தில் பிடிப்பு

வவுனியா, மார்ச் 16

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் 4 மணி நேரத்தில் 125க்கும் மேற்பட்ட கட்டாக்காலி மாடுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு பிடிக்கப்பட்டுள்ளன.

நகரில் அதிகரிக்கும் வாகன நெரிசல், கட்டக்காலி மாடுகளால் ஏற்படும் போக்குவரத்து இடைஞ்சல் மற்றும் விபத்துக்கள் ஆகியவற்றைக் குறைக்கும் நோக்குடன் வவுனியா நகரசபை இந்த நடவடிக்கையை முன்னெடுத்தது. வவுனியா நகர், பட்டாணிச்சூர், வேப்பங்குளம், கோவிற்குளம், குருமன்காடு மற்றும் வைரவப்புளியங்குளம் ஆகிய பகுதிகளில் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகள் வவுனியா நகரசபை வளாகத்திலும், வேப்பங்குளம் நகரசபை வளாகத்திலும் அடைத்து வைக்கப்பட்டுள்ளன. மாடுகளின் உரிமையாளர்கள் பிடிகூலி ஆயிரம் ரூபா, தண்டம் ஆயிரம் ரூபா, ஓர் நாள் பராமரிப்பு செலவு 300 ரூபா ஆகியவற்றைச் செலுத்தி மாடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தாமதிக்கும் நாள்களுக்கான பராமரிப்பு செலவு நாளாந்தம் 300 ரூபா விதிக்கப்படும் எனவும் நகரசபையினர் தெரிவித்துள்ளனர். (வ-18)

## இயற்கை உரம் தயாரிப்பு



கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் வசிக்கும் ஒருவர் நாளாந்தம் பயன்படுத்தும் தேங்காய் மட்டையை கொள்வனவு செய்து அதனை இயந்திரம் மூலம் நன்றாக அரைத்து பின்னர் காயவைத்து இயற்கை உரம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

குறித்த உரம் தயாரிக்கும் பணியில் சில பெண்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதை எம்மால் காண முடிந்தது.

இதனால் அவர்களது வாழ்வாதாரம் உயர்த்தப்பட்டுள்ளது என அவர்கள் தெரிவித்தனர். (ய-113)


**ஊர்க் கோழிக் குஞ்சு விற்பனைக்கு**

3 கிழமை ஊர்க் கோழிக் குஞ்சு
160 ரூபாய்.
கழுத்துவெட்டியும் உண்டு.

**தொடர்பிற்கு: 077 477 5603**


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் **25.02.2021** அன்று நடைபெற்ற **35** ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் **பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE)** பட்டம் பெற்ற எமது பாடசாலையின் ஆசிரியர்

**திரு.கணேசலிங்கம் யதீஸ்**

அவர்களை வாழ்த்துவதில் பெரும்மகிழ்வடைகின்றோம்.

வாழ்த்துவோர்: **பாடசாலைச் சமூகம்**
**யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி. இளவாலை.**

## VACANCY ANNOUCEMENT

The HALO Trust is a non-political and non-religious registered British charity, which removes land mines and other explosive remnants of war. HALO works in 25 countries and territories globally and has worked in Sri Lanka since 2002 with offices in Jaffna , Kilinochchi and Mullaitivu.

HALO is seeking hard working candidates for an Interpreter vacancy. **All applications must be submitted no later than Tuesday 23 March 2021.** Only successful candidates will be contacted. For further information please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply, particularly female candidates for this role.

Interested candidates should submit their bio-data, contact details, CV, and a brief summary of their experience **in English** to hr@halosrilanka.org or to The HALO Trust, 450 Thirunagar West, Kilinochchi.

This position should be viewed by many as an excellent entry-level position into the NGO field, opening up potential opportunities for further career advancement.

**INTERPRETER**

The Interpreter will provide verbal and written translation, particularly in support to HALO Sri Lanka's international staff both in the field and in the office. Duties will include, providing verbal translation during meetings, minefield visits and events, and providing written/typed translation of documents.

The candidate must be willing to work in all of HALO's areas of operations, sometimes for extended periods of time of up to a month.

**Essential:** fluency in English, Tamil both verbal and written, IT literate.

**Desirable:** previous NGO experience and Sinhala languages

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் **தம்பு அன்னலட்சுமி**

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அம்மாவே!
நாள்கள் பல ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அம்மா..

உங்கள் ஆத்மா சாந்தியடைப்
பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவில்
**குடும்பத்தினர்.**

தோற்றம் 19.09.1937 — மறைவு 14.02.2021

**பழமுதிர்ச்சோலை**
**ஏழாலை மேற்கு, ஏழாலை.**

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை நடராஜா

**(நடேஸ்வரா கல்லூரி பழைய மாணவன், சீமெந்துதொழிற்சாலை ஓய்வுபெற்ற லிகிதர்)**



**தோற்றம்** 13.04.1939 — **மறைவு** 15.03.2021

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நடராஜா அவர்கள் நேற்று (15.03.2021) திங்கட்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சரஸ்வதி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற நடராஜா நகுலாம்பிகையின் அன்புக் கணவரும், அகிலா, குமார், மைதிலி காலஞ்சென்ற யசோ ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இந்திராணி, துரைராஜா, யோகராஜா ஆகியோரின் அன்பு சகோதரரும் மற்றும் ஆனந்தராசா, காலஞ்சென்றவர்களான செல்வராசா, செல்லத்துரை, தங்கராசா, இராசம்மா மற்றும் கருணாநிதி, சிவராசா, கந்தசாமி, ரத்தினம், தங்கச்சியம்மா ஆகியோரின் உடன்பிறவாத சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் W.S.நீர்கொழும்பு மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் நீர்கொழும்பு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஏழாலை.**

**தகவல்**
**சிவராசா (சகோதரன்)**

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25.01.1933 — இறப்பு 29.03.2009



**அமரர் உயர்திரு. வல்லிபுரம் சுவாமிநாதன்**

(ஓய்வு பெற்ற உப.தபாலதிபர் - கொக்கிளாய்)


திதி : வளர்பிறை திருதியை

பாசத்தின் உறைவிடமே ஐயா!
உம் அன்புக்கும் அறிவுரைக்கும்
ஈடு இணை எதுவுமுண்டோ ஐயா!
ஆண்டுகள் பல கடந்தாலும் என்றும்
உம் நினைவுகளோடு வாழ்கிறோம் ஐயா!

**கொக்கிளாய் மேற்கு,**
**முல்லைத்தீவு.**

**குடும்பத்தினர்**

# சேவை நயப்பு



யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையில் 17.05 2012 தொடக்கம் ஆரம்பக்கல்வி ஆசிரியராகக் கடமையாற்றி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் அரும்பணியாற்றி மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தின் நன் மதிப்பினைப்பெற்று தனது 31 வருட சேவையிலிருந்து 28.02.2021 அன்று ஓய்வுபெற்ற எம் மதிப்பிற்குரிய ஆசிரியை

**திருமதி அருந்தவம் யோகராசா (SLTS-I)**

அவர்களின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வு காலத்தில் மென்மேலும் சிறப்புற்று வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

**யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை.**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி நல்லையா சரஸ்வதி

திதி : மாசி பூர்வபக்க திருதியை (16.03.2021)

குடும்ப விளக்கே
தாய்மையின் சிகரமே
நீங்கள் மறைந்து
ஈராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள்
என்றும் எம் மனதை விட்டு
நீங்காது உள்ளதம்மா

பிறப்பு 05.07.1936
இறப்பு 09.03.2019

குடும்பத்தினர்
புத்தூர் கிழக்கு வாதரவத்தை,
(இணுவில் மேற்கு இணுவில்)

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 07 . 1967



மறைவு 15 . 03 . 2021

## கந்தசாமி முரளிதரன்

கரம்பனைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பிரம்படியை வசிப்பிட மாகவும் கொண்ட திரு. கந்தசாமி முரளிதரன் நேற்று (15.03.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசுவாமி மற்றும் புனிதவதி அவர்களின் அன்பு மகனும், சாந்தகுமாரி அவர்களின் அன்புக் கணவரும், ஜெயபாரதி (கௌரி) அவர்களின் அன்பு சகோதரனும், வசந்துராதேவி அவர்களின் அன்புப் பெறாமகனும், கேதீஸ்வரன் அவர்களின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2021) செவ்வாய்க் கிழமை ந.ப 12.00 மணிக்கு அவர்களது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரம்படி, கொக்குவில். குடும்பத்தினர்.

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
Jaffna International Trade Fair
12th EDITION
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்
jitf.lk
www.jitf.lk
JITF 2021
CONCURRENTLY WITH
Higher Education & Career Exhibition
KALVI JAFFNA 2021
March மார்ச்
26 27 28
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)
MAIN SPONSOR INSEE CEMENT
OFFICIAL PARTNERS
ORGANIZED UNDER
MINISTRY OF HEALTH GUIDELINES
சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது
More information: Imalka +94 71 7488107
imalka@saexhibitions.com

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 27 . 12 . 1946



மறைவு 10 . 04 . 2016

## அமரர் ஜெயரட்ணம் பாலேந்திரன்

திதி: வளர்பக்க திருதியை (16.03.2021)

அப்பா நீங்கள் பறந்து சென்று ஆண்டுகள் ஐந்து சென்று விட்டன
அப்பா சிறியவ்யதில் இருந்து எமக்கு அன்பு பாசம் இரண்டையும் தந்தீர்
அறிவாலே எம்மை உயர்த்திப் பார்த்து ஆறுதல் அடைந்தீர்
அயராத உழைப்பால் எங்களை தூர தேசம் சென்று வாழவைத்தீர்
உங்களைப் பார்க்க வருவோம் என்று நாம் இருவரும் காத்திருக்க
நீங்கள் அம்மாவையும் எங்களையும் விட்டுச் சென்றது ஏனோ?
மனம் ஆறாமல் அம்மா தவிப்பது உங்களுக்கு புரியவில்லையா? அப்பா
ஆனாலும் அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்
என்று எண்ணி ஆறுதல் அடைகின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி,
மகன்மார் - குமரன், நந்தன், ஸ்ரீபிரணவன்.

## இலங்கை....

முன்னதாக 15 அவதானிப்புக்கள் மற்றும் 16 பரிந்துரைகளுடன் பிரித்தானியா தலைமையில் இணை அனுசரணை நாடுகளால் சமர்ப்பிக்கப்பட்ட 'பூச்சிய' வரைவானது முறைசாரா கூட்டங்களில் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்படி 'மனித உரிமை மீறல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடைய, ஆதாரங்களைச் சேகரித்து, ஒருங்கிணைத்து, பாதுகாப்பதற்கு' என்ற சொற்பதம் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது 'புதிதாக சேகரித்தல்' என்ற பதம் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் ஆதாரங்களை மேலும் திரட்டிக்கொள்வதற்கான எல்லையை மேற்படி பிரேரணை பரந்துபடச் செய்துள்ளது.

ஆரம்பத்தில் இந்த திருத்தத்தை மேற்கொள்வதில் இழுபறியான நிலைமைகள் காணப்பட்டன. திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் சாட்சியங்களை புதிதாக சேகரிப்பதற்கு மேலும் நிதித்தேவை காணப்படுகிறது எனவும் அதனை பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகள் காணப்படுகின்றன எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் ஆஸ்திரேலியா இந்தச் செயற்பாட்டுக் தேவையான 2 மில்லியன் டொலர் நிதியை வழங்குவதற்கு முன்வந்ததையடுத்து திருத்தம் இறுதி செய்யப்பட்டது.

அதேநேரம் அமெரிக்கா 'மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, 'மனித உரிமை மீறல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட குற்றங்கள்' என்ற சொற்றொடரை இணைத்துள்ளது.

மேலும் ஜனாஸாக்களை கட்டாயத் தகனம் செய்தமை தொடர்பான விடயத்தை நீக்குவதற்கு இலங்கை அரசாங்கமும், நட்பு நாடுகளும் மேற்கொண்ட முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. இந்த வரைவை இறுதி செய்து சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி இன்றாகும். (ம)

## கிளிநொச்சியில்...

என்று தெரிவிக்கப்பட்டது.

கிராமத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே இந்த வீட்டுக்குச் சிலர் தீ வைத்துள்ளனர் என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர். அயலவர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

சம்பவத்தின்போது குடியிருப்பாளர் தாக்கப்பட்டார் என்றும், அவரைக் காணவில்லை என்றும் நேற்றிரவு கிராம மக்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-6)

## விபத்தில்...

மன்மதராசா தயாபரன் (வயது-40) எனும் இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 13ஆம் திகதி கொழும்புத்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றபோது, மோட்டார் சைக்கிள் சறுக்கியதால் விபத்தில் சிக்கினார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## விபத்தில் சிக்கியவர்...

கைதடி தெற்கு, நாவற்குழியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்வராசா (வயது-59) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சைக்கிளில் பயணித்த இவர், வீதியைக் கடக்க முயன்றபோது, பின்புறமாக வந்த கார் மோதியுள்ளது. அதில் படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் நேற்றுமுன்தினம் மாலையே உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமாரால் நேற்று மேற்கொள்ளப்பட்டன. (எ-26)

## திடீரென....

சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது.

யாழ்ப்பாணம், கொக்குவிலைச் சேர்ந்த கந்தசாமி முரளிதரன் (வயது-53) என்பவரே உயிரிழந்துள்ளார்.

திருநெல்வேலி, பரமேஸ்வரா வீதியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு ஒருவரை முச்சக்கரவண்டியில் அழைத்து வந்த போதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இவருக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்ததும் என்றும், அங்கிருந்த தூணில் சாய்ந்தவாறு தொலைபேசி பேசிக் கொண்டிருந்தவர், அப்படியே நிலத்தில் சரிந்து வீழ்ந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் உடனடியாக போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் அறிக்கையிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-26)

## பிரிட்டனின்...

தாங்குவது நட்புறவற்ற செயலாகும். இது நம்பிக்கைத் துரோகமாகும் என்று சாடியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான புதுப்பிக்கப்பட்ட பிரேரணை வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மீது முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை நாட்டின் இறையாண்மையை மீறுவதாகும். இவ்வாறான தொரு பிரேரணைக்கு, பிரிட்டன் தலைமை தாங்குவது, ஒரு பொதுநலவாய உறுப்பினரான இலங்கை மீது பிரிட்டனின் நட்புறவற்ற செயலாகும். இது பிரிட்டன், இலங்கைக்குச் செய்யும் நம்பிக்கைத் துரோகமாகும். இலங்கையைத் திட்டமிட்ட வகையில் பிரிட்டன் தலைமையிலான சில நாடுகள் பழி வாங்குகின்றன- என்றார். (எ-22)

## தீக்குளிப்பதற்கு...

தாரத் தொண்டர்கள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவர் நேற்றுக் காலை மயக்கமடைந்தார். அதையடுத்து அவர் நோயாளர் காவுவண்டி மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அதையடுத்து சுகாதாரத் தொண்டர்கள் நண்பகல் 12 மணியளவில் வீதியில் இறங்கிப் போராட்டம் மேற்கொண்டனர். அதனால் ஏ-9 வீதியில் போக்குவரத்துத் தடைப்பட்டது. அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட மேலும் இரு பெண்கள் மயங்கி வீழ்ந்தனர். அவர்களும் நோயாளர் காவுவண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர்.

அதையடுத்து அங்குள்ள ஆளுநர் அலுவலகத்தின் வாயிலை முற்றுகையிட்ட சுகாதாரத் தொழிலாளர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். அப்போது அங்கு வந்த ஒருவர், தான் கடற்றொழில் அமைச்சரின் பிரதிநிதி என்று சுகாதாரத் தொண்டர்களிடம் தெரிவித்ததுடன், இந்தப் பிரச்சினை தொடர்பாக ஆளுநருடன் கலந்துரையாடவுள்ளேன். அதனால் உள்ளே செல்ல அனுமதியுங்கள் என்று கூறினார். அவரை சுகாதாரத் தொண்டர்கள் உள்ளே அனுமதித்தனர். அதன்பின்னர் அந்த இடத்திலிருந்த யாழ்ப்பாணப் பிராந்திய பிரதம பொலிஸ் அத்தியட்சகர், சுகாதாரத் தொண்டர்கள் சார்பாக 5 பேரை ஆளுநர் கலந்துரையாடலுக்கு அழைக்கின்றார் என்று தெரிவித்து அழைத்துச் சென்றார். ஆளுநருடனான சந்திப்பை முடித்து வெளியே வந்த சுகாதாரத் தொண்டர்களின் பிரதிநிதிகள், ஜனாதிபதி, பிரதமருடன் ஆலோசித்தே இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என்று ஆளுநர் தெரிவித்தார் எனக் கூறினார்கள்.

"சுயமாகத் தன்னால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துகின்றேன். சரியான தீர்வைப் பெற்றுத்தரும் சரியான கால எல்லையை தன்னால் கூறமுடியாது என்று ஆளுநர் தெரிவித்தார்" என சுகாதாரத் தொண்டர்களின் பிரதிநிதிகள் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

நடந்தவற்றை ஊடகங்களிடம் தெரிவிக்குமாறு கடற்றொழில் அமைச்சரின் பிரதிநிதி என்று கூறிக்கொண்டவரை சுகாதாரத் தொண்டர்கள் அழைத்த போது அவர் மறுப்புத் தெரிவித்தார்.

இவற்றால் கோபமடைந்த சுகாதாரத் தொண்டர்களில் இருவர் தீக்குளிக்க முயன்றனர். சக சுகாதாரத் தொண்டர்கள் அவர்களை ஒருவாறு தடுத்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் சுகாதாரத் தொண்டர்களுடன் கலந்துரையாடியுள்ளார். இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றில் பேசுவேன் என்று அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, இதுவரை உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுத்துவந்த சுகாதாரத் தொண்டர்கள், தங்கள் போராட்டத்தைக் கவனவீர்ப்புப் போராட்டமாக மாற்றியுள்ளனர். தங்களுக்குத் தீர்வுகிடைக்கும்வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். (எ-319,20)

## இலங்கை அரசுக்கு...

யாடலின்போதே, இந்தியா இதனைத் தெரிவித்துள்ளது.

"நாம் இலங்கைக்கு எவ்வித அநீதியையும் இழைக்க மாட்டோம்" என்று இந்தியப் பிரதிநிதி ஐ.நா. அதிகாரப்பற்றற்ற கலந்துரையாடலில் குறிப்பிட்டுள்ளார் என்று கொழும்பு ஊடகமொன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேநேரம், இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

பிரிட்டன் தலைமையிலான நாடுகள் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைத்துள்ள பிரேரணைக்கு வாக்களிப்பது தொடர்பாக இந்தியா இதுவரையில் எந்தத் தகவலையும் வெளியிட்டிருக்கவில்லை. இந்நிலையிலேயே இந்தியப் பிரதிநிதி மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவரின் கருத்துக்கமைய பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்கமாட்டாது என்பது நிரூபணமாகியுள்ளது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (எ-22)

## நாளைய....

சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக நாளை புதன்கிழமை நல்லூர் முத்திரைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் பேரணி உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தப்படும் இடத்தில் முடிவடையவுள்ளது. தூதரங்களுக்குக் கையளிப்பதற்கான கடிதங்களும் வழங்கப்படவுள்ளன.

தமிழ் இனத்தின் மீதான இன அழிப்புக்கு சர்வதேச நீதி கோரி தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் வடக்கு, கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் ஏற்பாட்டில் நல்லூரில் நாளை பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் எதிர்வரும் 19ஆம் திகதி பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டங்களுக்கு பல்வேறு அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. நாளை நடக்கவுள்ள பேரணிக்கு இந்து சமயப் பேரவை தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் வேலவன் சுவாமிகள் ஆகியோரும் தங்களது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

பொத்துவில் முதல் பொலிகண்டிவரை மக்கள் பேரெழுச்சி இயக்கமும் தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் நீதி மற்றும் உரிமைகளுக்கான இந்தப் போராட்டங்களுக்கு மதத் தலைவர்கள், தமிழ்த் தேசியக் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் வலுச் சேர்க்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கழுத்து...

மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவரது கணவரே இவரைக் கூரிய ஆயுதத்தால் வெட்டியுள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் மட்டுவில் தெற்கில் நடந்துள்ளது. 25 வயதுடைய பெண் ஒருவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-9)

# மரணச் சடங்குகள் தொடர்பில் ஏப்ரல் முதல் புதிய நடைமுறை

**கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு**

கிளிநொச்சி, மார்ச் 16

மரணச் சடங்குகள் தொடர்பில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் புதிய நடைமுறை கொண்டுவரப்படும் என்று கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ. வேழமாலிகிதன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அண்மைக் காலமாக கிளிநொச்சியில் என்றுமில்லாதவாறு மரணச் சடங்குகள் மற்றும் ஊர்வலங்களில் முகம் சுழிக்கக்கூடிய வகையில் பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. மரண நிகழ்வுக்கான ஒழுங்கு முறைகள் மீறப்படும் வகையிலான நிகழ்வுகளையே காணமுடிகின்றது. அதற்கு அமைவாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் பல்வேறு விடயங்களை நடைமுறைப்படுத்தவும், மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மரண நிகழ்வு ஒன்றுக்கான தகன அல்லது இடுகாட்டுக்கான அனுமதி பெறப்பட வேண்டும் என்பதுடன், அதனை உயிரிழந்தவரின் நெருங்கிய உறவினரே பெற்றுக்கொள்ள வேண்டும். குறித்த மரண நிகழ்வுக்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டவரே ஒழுக்கத்துக்கும் பொறுப்புடையவராக கருதப்படுவார்

மரண ஊர்வலங்களின்போது சினிமாப் பாடல்களையும், துள்ளிசை பாடல்களையும் இசைக்கக் கூடாது. மீறினால் குறித்த வாத்திய வாசிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி இரத்து செய்யப்படும். வெடி கொழுத்துவதற்கான அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அனுமதியளிக்கப்பட்ட 3 முக்கிய இடங்களிலும், இறுதி நிகழ்வு இடம்பெறும் பகுதியிலும் மாத்திரமே வெடி கொழுத்த முடியும்

தற்போது உள்ள கலாசார சீரழிவுகள் மற்றும் பொது மக்களின் பாதுகாப்பு, ஒழுக்கம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு பிரதேச சபையால் இவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ-6)

# பெண்களின் உள்ளாடையில் இலங்கைத் தேசியக் கொடி

## அமேசனில் மீண்டும் சர்ச்சை

**கொழும்பு, மார்ச் 16**

**தேசியக் கொடியைப் பயன்படுத்தி பெண்களின் உள்ளாடைகள் மற்றும் வேறு ஆடைகள் தொடர்பான வர்த்தக விளம்பரங்கள் அமேசன் இணையத்தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை தகவல் தொழில்நுட்ப சங்கம் தெரிவித்துள்ளது.**

இலங்கைக் தேசியக் கொடியைப் பயன்படுத்தி மேலும் பல பொருள்கள் எதிர்வரும் காலங்களில் அமேசன் இணையத்தளத்தில் உள்ளடக்கக் கூடும் என்பதனால், இலங்கை அரசு இராஜாதந்திர ரீதியில் தலையிட வேண்டும் என அந்தச் சங்கம் அரசிடம் கோரிக்கையும் விடுத்துள்ளது.

கடந்த சில நாள்களாக சமூக ஊடகங்களில் இலங்கைத் தேசியக் கொடியை அவமதிக்கும் பல விளம்பரங்கள் பதிவிடப்பட்டிருந்தன. அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பீஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தால் ஊடக அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

அவ்வாறு தேசியக் கொடியை அவமதிக்கும் வகையிலான பொருள்களை விற்பனை செய்வதற்கு நிறுத்தல் நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே புதிதாக தேசியக் கொடியைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ள உள்ளாடை விளம்பரங்கள் மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. (ப)


**காணி தேவை**
திருநெல்வேலி, கோண்டாவில், கொக்குவில், நல்லூரில் பிரதான வீதிக்கண்மையில் தேவை.
தரகர்கள் வேண்டாம்.
076 756 1570

**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி - யாழ்ப்பாணம்
கே.கே.எஸ் வீதி - சுன்னாகம்
BARATHY
சித்தன் கேணி
எமது மூன்று நிறுவனங்களிலும்
A/L 2023
கலை வர்த்தகப் பிரிவு
மார்ச் 28 இல் (ஞாயிறு)
முன்கூட்டியே உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
யாழ் நகரில் கலை 8.00 - 12.00 வரை
சுன்னாகத்தில் மாலை 3.30 - 5.30 வரை
சித்தன்கேணி மாலை 3.30 - 5.30வரை
உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்
மேலதிக விபரங்களுக்கு: 077 376 3511

A/L - 2K23
(கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்)
மார்ச் - 20
காலை 9.00 மணி
DMI JAFFNA

**வேலைவாய்ப்பு**
யாழ் நகரில் அமைந்துள்ள கடை ஒன்றிற்கு பின்வரும் பதவிக்கு ஆட்கள் தேவை
அலுவலக உதவியாளர் (பெண்)
வயதெல்லை:18-25, கல்வித்தகைமை:க.பொ.த(உ/த)
(சாரதி அனுமதிப்பத்திரம் மேலதிக தகமையாக கருதப்படும்)
மேலதிக விபரங்களுக்கு : 021 - 222 - 5665
ஆர்வமுடையோர் சுயவிபரக்கோவையினை 17.03.2021 இற்கு முன்னர் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்
d.distributors21@gmail.com




காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

# சர்வதேசத்திடம் நீதிகோரி உணவுத் தவிர்ப்புப் போர்!

திருகோணமலை, மார்ச் 16

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கைகளை சர்வதேசம் கவனமெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சாகும் வரையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை நேற்று திங்கட்கிழமை திருகோணமலை சிவன் கோயில் முன்றலில் ஆரம்பித்துள்ளனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் திருகோணமலை மாவட்ட சங்கத் தலைவி திருமதி. நா. ஆஷா தலைமையில் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஐ-40)


**ஓராண்டு நினைவஞ்சலி**

மலர்வு 13 . 11 . 1956

நிறைவு 26 . 03 . 2020



அமரர்
சத்தியானந்தசிவம் தவசீலன் J.P
(தவம்)

தாங்கள் இவ் உலகை வாழ்வினை நிறைவு
செய்து ஓர் ஆண்டு சென்று விட்டதா.....
ஆண்டுகள் பல கடந்தாலும் உங்கள் நினைவுகளும்,
உங்கள் சேவைகளும், எங்கள் மனதில்
நிழலாய் தொடரும்.....
நீங்கள் ஞான வைரவரின் பாதார
விந்தங்களில் வாழ்வீர்களாக...

40 ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.